# கட்டுமரத்திலிருந்து விழுந்தவரை காப்பாற்றக் குதித்தவரும் பலி

Registered as a News paper in Ceylon
விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ் 43
தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 12 முஹறம் 6 செவ்வாய்க்கிழமை 25-3-69

மணம், குணம், சுவை
நிறைந்தது
அண்ணா கோப்பி



எமது கோப்பி
லேபலைப் போல்
போலி லேபல்
தயாரித்து
போலி கோப்பிகளை
விற்பனைசெய்கின்றனர்
போலிகளை
வாங்கி ஏமாறுதீர்கள்.
அண்ணா இன்டஸ்றி
இணுவில்.

## பருத்தித்துறையில் கோரச் சம்பவம்

**வல்வெட்டித்துறை, திங். கட்டுமரத்திலிருந்து தவறி விழுந்த சிறுவனைக் காப்பாற்றக்குதித்தவரும் கடலுக்குப் பலியானர். இருவரைப் பலி கொண்ட இந்தக் கோரச் சம்பவம் பருத்தித்துறைக் கடலில் நேற்று மாலை நடந்தது.**

மண்ணெண்ணெய் மூலம் இயங்கும் புதிதாக வாங்கப் பட்ட கட்டுமரத்தில் புதிய என்ஜின் இயங்குவதைப் பரீட்சை செய்யுமுகமாக நீராவியடியைச் சேர்ந்த பசுபதி இராசரத்தினம் (15 வயது) என்ற மெக்கானிக் சிறுவன் ஒருவருடனும் கட்டு மரச் சொந்தக்காரராகிய அந்தோனிப்பிள்ளை லீனப்பு, பவிலீனப்பு அந்தோனிப் பிள்ளை ஆகிய மூவரும் தங்கள் புதிய கட்டுமரத்தில் மணற்காடு என்னும் தங்கள் மூவருமாகப் பயணம்செய்துகொண்டிருக்கும் போதே இச்சம்பவம் நடைபெற்றது.

நேற்று மாலை 4 மணியளவில் இம்மூவரும் சென்று கொண்டிருந்த கட்டுமரத்திலிருந்து பசுபதி ராசரத்தினம் என்ற மெக்கானிக் சிறுவன் தவறிக் கடலுக்குள் விழவே, மற்ற இருவரும் அவரைக் காப்பாற்றக் கடலில் குதித்தார்களாம். கடலில் நீந்தத் தெரியாத இந்த மெக்கானிக் சிறுவன் தன்னைக் காப்பாற்ற வந்த ஒருவரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாராம். இருவரும் கடலுக்குப் பலியானார்கள். அந்தோனிப் பிள்ளை என்பவர் மட்டும் மீண்டும் கட்டுமரத்தில் அவலநிலைக்குள்ளாகி ஏறிக் கொண்டார். அக்கட்டுமரம் தெய்வாதீனமாக மூக்கம் கடற்கரையில் ஒதுங்கிக் கொண்டது.

கடலில் யாரோ விழுந்த காட்சியைக் கண்ட சிங்கராசா என்பவர் தன் கட்டு மரத்தை அதிவிரைவாக விழுந்த இடத்திற்குச் செலுத்தியும் அவர் கோஷ்டி அங்கு போய்ச் சேருமுன்பு கடலில் விழுந்தவர்கள் பரிதாபகரமாக நீருக்குள் அகப்பட்டுக்கொண்டபடியால், சென்ற கோஷ்டியால் காப்பாற்றமுடியாது போய் விட்டதாம். இரண்டு பிரேதங்களும் கடல்நீரில் இழு பட்டுச் சென்று இன்று காலை 7 மணியளவில் மெக்கானிக் இராசரத்தினத்தின் உடல் மட்டும் மூக்கம் கடற்கரையில் ஒதுங்கிக்கொண்டது. லீனப்புவின் சடலம் ஒதுங்கக் காணுமையால் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி குமரகுரு என்னும் சுழியோடியினுல் கண்டுபிடித்து எடுக்கப்பட்டது.

மணற்காட்டைச் சேர்ந்த லீனப்புவுக்கு 10 பிள்ளைகள் உண்டு. கடைசிப் பிள்ளைக்கு ஒன்றரை வயதாகும். மரண விசாரணை நடைபெறுகிறது.

## திருமலையில் பல்கலைக்கழகம்

திருக்கோணமலை, திங்கள்
திருகோணமலையில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவது பற்றி ஆராய்வதற்கென கூட்டமொன்று பெருந்தருப் பாடசாலையில் நடைபெற்றது.

திரு. ஓ. எல். எம். இஸ்மாயில் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தேசிய உயர் கல்விச் சபைத் தலைவரைச் சந்தித்து இங்கு ஒருபல்கலைக் கழகத்தை நிறுவும்படி வற்புறுத்த 15 பேரைக் கொண்ட ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## கார் அன்பளிக் முயற்சி

யாழ்ப்பாணம், செவ்.
யாழ் மாநகரசபை 21-ம் வட்டார உறுப்பினர் ஜனுப் எம். சி. பசீருக்கு நிதிதிரட்டி கார் ஒன்று வேண்டிக் கொடுப்பதற்கு முஸ்லிம் இளைஞர் மன்றம் முயற்சி எடுத்து வருகிறது.
(ந. நி)

# மட்டுவிலைப்பின்பற்றி அல்வாய் வடக்கு ஆலயகதவுகள்மூடின

## ‘கிணறுகள் சரியில்லாததால் மரணங்கள் அதிகரிக்கின்றன’

யாழ்ப்பாணம், செவ்.
பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறைப் பகுதிகளில் கிணற்றினுல் ஏற்படும் மரணம் அதிகரிப்பதற்குக்காரணம் இங்குள்ள கிணறுகள் சரியாகக் கட்டப்படாமலும், பாதுகாப்பு இல்லாமலும் இருப்பது தான் என்று வடபகுதி பொலிஸ் சுப்ரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் தமது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைப்பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பரிசோதனை நடாத்திய பின்னரே பொலிஸ் சுப்பிரிண்டன்ட் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இங்குள்ள கிணறுகள் பாதுகாப்பில்லாமலும், சரியாகக் கட்டப்படாமலும் இருப்பதாலேயே தற்கொலைகளும், விபத்து மரணங்களும் அதிகரிப்பதாகக் குறிப்பிட்ட பொலிஸ் அதிபர், இது விஷயத்தில் கிராம முன்னேற்றச்சங்கங்கள், ஜனசமூகநிலையங்கள் ஆகியன இவைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும், இதுவிஷயத்தில் பொலிசாரும் கவனமாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.
(கா. நி.)

## ‘வக்காலத்து’ பற்றி சட்டசபையில் விவாதம்

### சபாநாயகர் தீர்ப்பைஎதிர்த்து எதிர்க்கட்சி வெளிநடப்பு

## ஆலய பிரவேச முயற்சியினுல் வருடாந்த உற்சவமும் நின்றது

யாழ்ப்பாணம், செவ்வாய்
**ஆலயப்பிரவேசம் செய்வதற்கு முயற்சி செய்யப்பட்ட மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயம் சென்ற திங்கட்கிழமை பூட்டப்பட்டிருந்ததுபோல் நேற்றுக் காலையும் ஆலயப்பிரவேச இயக்கத்தின் இரண்டாவது முயற்சியையும் தடை செய்யும் பொருட்டு ஆலயக்கதவுகள் மூடப்பட்டிருந்தன. பன்றித்தலைச்சி அம்மன் கோவிலைப் பின்பற்றி மற்ருேர் இயக்கத்தினர் நேற்று ஆலயப் பிரவேசம் செய்யத் திட்டமிட்டிருந்த அல்வாய் வடக்கு வீரபத்திரர் ஆலயக் கதவுகளும் நேற்று மூடப்பட்டன. நேற்றுஆரம்பமாகவிருந்த ஆலய வருடாந்த உற்சவம் நிறுத்தப்பட்டது.**

புரட்சிகர சமசமாஜ விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் நேற்றுக் காலை அல்வாய் வீரபத்திரர் கோவிலுக்குச் சென்றனர். அங்கு சென்று ஆலயக் கிணற்றில் கால் முகம் அலம்ப முயற்சித்தனர். ஒருசாரார் இவர்களை கிணற்றுள் அள்ள விடாது தடுத்ததாகக் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இருபகுதியினரிடையேயும் சச்சரவு ஏற்படவே பொலிஸார் இருபகுதியினரையும் அங்கிருந்து கலைந்து செல்லுமாறு உத்தரவிட்டனர்.

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. எம். ஸி. சுப்பிரமணியும் [illegible] டர் [illegible] ரும் வந்திருந்தனர்.

## அதிர்ஷ்டத்தில் கிடைத்த யானை

கொலம்பியா, மார்ச் 24
அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் யானையொன்றை

உடுப்பிட்டியில்

## துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

### ஆபத்தான நிலையில் ஒருவர் ஆஸ்பத்திரியில்

இமையாணன், திங்.
உடுப்பிட்டி வீரபத்திர கோவிலடியில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயத்துக்குள்ளானர். மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்ட இவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

திரு. க. ஜெயரத்தினம் என்பவரே துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் காயமடைந்தவராவார். இவரின் நிலை ஆபத்தாகவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## ‘58 பிரம்படி’

### ஆசிரியர் மீது புகார்

கொழும்பு, திங்.
மாணவர் ஒருவருக்கு 58 பிரம்படி கொடுத்தாராம் ஆசிரியர் ஒருவர். கம்பகா சித்தாந்த வித்தியாலயத்தில் நிகால் என்ற மாணவரை ஆசிரியர் ஒருவர் பிரம்பினுல் இப்படி அடித்ததாக அவரது தந்தை கம்பகா பொலிஸிலும், கல்வி அமைச்சரிடமும் புகார் செய்துள்ளார்.

இது சம்பந்தமாக உடனடி விசாரணை நடாத்தும்படி மாவட்ட கல்வி இலாகாவுக்கு கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளாராம்.

## பிரேரணை

அளவெட்டி, திங்கள்
சியவச அதிஷ்டலாபச்சீட்டை வாபஸ் பெறும்படி கல்வி அமைச்சரைக்கோரும் தீர்மானம் ஒன்று சுன்னுகம் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

8-ம் வட்டார அங்கத்தவரும் சபையின் உபதலைவருமான திரு. இ, இராசதுரையே இத் தீர்மானத்துக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

## கசபுவு காலமானுர்

லண்டன், மார்ச் 24
கொங்கோ நாட்டின் முதலாவது ஜனுதிபதி திரு. ஜோசெப் கசபுவு இன்று காலமானுர். இவர் நீண்டகாலமாக சுகவீனமுற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வக்காலத்து’ பற்றி சட்டசபையில் விவாதம்

## சபாநாயகர் தீர்ப்பைஎதிர்த்து எதிர்க்கட்சி வெளிநடப்பு

சென்னை மார்ச் 24

தமிழ் நாடு கீழ் சட்டசபையில் இன்று எதிர்க்கட்சி காங்கிரஸ் அங்கத்தவர்கள் சபாநாயகர் அளித்த தீர்ப்பொன்றை ஆட்சேபித்து வெளிநடப்பு செய்தார்கள்.

மாதவன் என்ற அங்கத்தவர் கேட்ட கேள்வியொன்றுக்கு நிதி அமைச்சர் அளித்த பதிலின்போது மத்திய அரசுக்காக அங்கத்தவர் ‘வக்காலத்து’ வாங்குகிருர் என்று குறிப்பிட்டார் இந்த வார்த்தை பிரயோகத்தை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்தனர் இந்த வார்த்தை அங்கத்தவரின் கெளரவத்துக்கு பாதகமானதென்று கூறி சபைக் குறிப்புப் புத்தகத்திலிருந்து அதனை எடுத்து விட வேண்டுமென்று எதிர்க்கட்சிக் கொறடா உரிமைப் பிரச்னையொன்றை கிளப்பிஞர்.

பரிந்து பேசுகிருர் என்ற பொருளிலேயே அமைச்சர் இந்த வார்த்தையைப் பிரயோகித்ததாகவும் கெளரவமான இந்த வார்த்தையைப் பாவிக்கப்படலாமென்றும் இதில் உரிமைப் பிரச்னையொன்றுமில்லையென்றும் சபாநாயகர் புலவர் கோவிந்தன் தீர்ப்பளித்தார் உடனே திரு விஞயகம்எழுந்து பணம் வாங்கிகொண்டு பரிந்து பேசுவதைத்தான் வக்காலத்து என்ற வார்த்தையைக் குறிக்குமென்றும் சபாநாயகர் தீர்ப்பைத் தாம் ஆட்சேபிப்பதாகக் கூறி சபையிலிருந்து வெளிநடப்பு செய்தார். அவரைத் தொடர்ந்து காங்கிரஸ கட்சியின் மற்ற அங்கத்தவர்களும் வெளிநடப்பு செய்தார்கள்

எதிர்க் கட்சி அங்கத்வர்கள் மீண்டும் சபைக்கு வந்தபொழுது சபாநாயகர் எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்ததுபற்றி கண்டித்தார் தமது கூற்றுக்கு ஏற்கனவே உள்ள சம்பவங்களை அவர் ஆதாரங்காட்டிஞர். சபாநாயகர் தீர்ப்பை எதிர்த்து அங்கத்தவர்கள் வெளிநடப்பு செய்தது சபை மரபுக்கு உகந்ததல்லவென்றும் தீர்ப்பின் மீது அதிருப்தி உண்டென்றுல் அது பற்றி தீர்மானம் கொண்டுவருவது போன்ற வேறு முறைகளைக்கையாள வேண்டும் என்றும் சபாநாயகர் குறிப்பிடடார். இந்த முறை எதிர்க்கட்சியின் மீது தாம் நடவடிக்கையொன்றும் எடுக்கப்போவதில்லையென்றும் இனி இவ்வாறு நடந்துகொள்ளக் கூடாதென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

---

தவர்கள் நேற்றுக் காலை அல்வாய் வீரபத்திரர் கோவிலுக்குச் சென்றனர். அங்கு சென்று ஆலயக் கிணற்றில் கால் முகம் அலம்ப முயற்சித்தனர். ஒருசாரார் இவர்களை கிணற்றுள் அள்ள விடாது தடுத்ததாகக் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இருபகுதியினரையும் அங்கிருந்து கலைந்து செல்லுமாறு உத்தாவிட்டனர்.

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. எம். ஸி. சுப்பிரமணியம், முன்ஞள் செனட்டர் ஜி. நல்லையா ஆகியோரும் வந்திருந்தனர்.

# உற்சவம் நிறுத்தம்; ஆலயம் பூட்டப்பட்டது

நல்லூர், செவ்.

நேற்று ஆரம்பமாக விருந்த அல்வாய் வடக்குவீரபத்திரர் கோவில் வருடாந்த உற்சவம் கோவில் பூட்டப்பட்டிருந்ததால் நடைபெறவில்லை.

இந்த ஆலயத்தின் தர்மகர்த்தாவான திரு. வி. கே. எஸ். பாலசுப்பிரமணியம் கோவிலைப் பூட்டி விட்டு வெளியூர் சென்று விட்டதாலேயே இவ்விதம் கோவில் வருடாந்தஉற்சவம் நேற்று நடைபெறமுடியாது போனதாகத் தெரியவருகிறது.

நேற்று வருடாந்த உற்சவத்தின்போது ஆலயப் பிரவேசம் செய்ய புரட்சிகர இயக்கத்தினரும் வேறு சிலரும் முயற்சி கொண்டதாகவும் இதனைத் தொடர்ந்து ஆலயம் பூட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆலயஉற்சவம் இவ் வருடம் நடைபெருதெனவும் தெரியவருகிறது. பத்து நாட்கள் தொடர்ந்து வருடாந்த உற்சவம் நடைபெறுவது வழக்கம்.

# கேணியைச் சுற்றியும் முட்கம்பி அடைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் முன்னுலுள்ள கேணியைச் சுற்றி இப்போது முட்கம்பி அடிக்கப்பட்டுள்ளது. சென்ற வாரம் ஹரிஜனர்களால் பாவிக்கப்பட்ட மடத்தைச் சுற்றியும் முட்கம்பி அடிக்கப்பட்டுள்ளது. இதனுல் பொங்கல் பொங்க விரும்புபவர்கள் தம்முடனேயே தண்ணீர் கொண்டுசெல்ல வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்த 38 பேர் திரு. எஸ்.ரி.என். நாகரத்தினம் தலைமையில் கோவிலை வந்தடைந்து கை, கால், முகம் கழுவுவதற்காக கிணற்றடிக்குக் சென்றபோது கோவில் கிணற்றினுள் குப்பை கஞ்சல்போடப்பட்டிருந்ததை அவதானித்த அவர்கள் அவ்விதம் செய்யமுடியாது திரும்பினர். கிணற்றின் துலாவும் அகற்றப்பட்டுள்ளது.

இது ஓர் அநாகரீகமான செயல் என திரு நாகரத்தினம் தெரிவித்தார்.

ஆலயப்பிரவேசம் செய்வதற்கென 15 பேர் கொண்ட வேருெரு கோஷ்டியும் நேற்று வந்திருந்தது. காங்கேசன்துறையிலிருந்து டாக்சியொன்றில் வந்த ஒரு கோஷ்டியினர் இவ்வித நிலைமையை உத்தேசித்துத் திரும்பிச் சென்றனர்.

நேற்று பொலிஸ் பந்தோபஸ்து பலப்படுத்தப் பட்டி

4-ம் பக்கம் பார்க்க

# ‘நல்லெண்ணெய்உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கவேண்டும்’

## ஆட்சிமன்றத்தில் கிளிநொச்சி எம். பி.

கொழும்பு, திங்கள்

நல்லெண்ணெய் உற்பத்தியை நவீன முறைப்படி இயந்திர சாதானங்கள் மூலம் அதிகரிக்க எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஆட்சிமன்றத்தில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கேட்டுக்கொண்டார்.

நல்லெண்ணெய் உற்பத்தியாளருக்கு ஊக்கமளிப்பதற்கு அரசாங்கம் அக்கறை செலுத்தாததால் நல்லெண்ணெய் உற்பத்தி குறைவதாகத் தெரிவித்த கிளிநொச்சி எம். பி. நல்லெண்ணெய் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதால் தேங்காய் எண்ணெய் உற்பத்தி பாதித்துவிடாதென்றும், தேங்காய் எண்ணெயையும் அதிகமாக உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்யலாமென்றும் தெரிவித்தார்.

தேங்காய் எண்ணெயை விட நல்லெண்ணெய்க்கு அதிக கிராக்கி இலங்கையில் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த திரு. இரத்தினம் எம். பி. நல்லெண்ணெய் உற்பத்தியில் அரசாங்கம் கூடிய அக்கறை செலுத்த வேண்டுமென்ருர்

முன்னைய நாட்களில் இலுப்பை எண்ணெயை குடிசைக் கைத்தொழில் மூலம் அதிகரித்து வந்ததாகவும், தற்போது அதுவும் குறைந்து விட்டதென்றும் கூறிய கிளிநொச்சி எம். பி. இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றுகேட்டுக் கொண்டார்.

# அதிர்ஷ்டத்தில் இடைத்த யானை

கொலம்பியா, மார்ச் 24

அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் யானை யொன்றை பெற்றவர் அதனைக் கட்டித் தீனி போடுவது மாளாது என்று கண்டு கொண்டதால் அதனை விடுவிப்பதற்கு பெரும் பாடு பட்டுப் போஞர். முதலில் யானையை வீட்டுக்கு கொண்டுவர ஒரு தொகை பணம் செலவாயிற்று. வீட்டின் அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு ஈடு கொடுக்க நேர்ந்தது. அதனை சர்க்கஸ் கம்பனிக் காரர்களும் மிருகக் சாட்சிசாலை அதிகாரிகளும் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள் கடைசியில் நண்பர் ஒருவர் அதனைத் தம் பொறுப்பில் கொண்டுபோக முன் வந்தார். அவரும் அதனைக் கொண்டு போவதற்கான கூலியை அவரிடமே கேட்டு வாங்கிக் கொண்டார்.

# ‘உரிமையில்லாதஆலயங்களை பகிஷ்கரிப்பதேமேன்மையானது’

## சமசம ஜப்பிரமுகர்கருத்து

உடுப்பிட்டி, திங்கள்

‘புரட்சிமூலம் ஆலயப் பிரவேசம் செய்வதால் சமுக முடிவு காணமுடியாது. புரட்சியை நம்புவது கேலிக் கூத்தாகும். பல வருடங்களுக்குமுன்னர் நல்லூர் கந்தசாமி கோவில், வண்ணுர்பண்ணைச் சிவன் கோவில், வில்லூன்றிப் பிள்ளையார் கோவில் போன்ற பிரபல சைவஆலயங்களில் எவ்வித போராட்டமுமின்றி ஆலயக்கதவுகள் திறந்து விடப்பட்டன. புரட்சி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் பெரும்பான்மைச் சமூகமக்களின் மனமாற்றத்தினுல் ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. அதேபோல் இதர ஆலயங்களும் தாமாகவே திறக்கப்படும் சூழ்நிலை உருவாகிவரும் நாளில் புரட்சி என்ற பாதையில் மக்களைத் திசைதிருப்பி தமிழ் மக்களுக்குள் பிளவை உண்டாக்குவது விசனத்துக்குரியது.’’

இவ்வாறு வட்டபிரதேச சமசமாஜ வாலிப முன்னணித் தலைவர் டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி அல்வாய் வீரபத்திர ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

‘சிறுபான்மைத் தமிழர் நமக்கு உரிமையில்லாத, சுதந்திரமில்லாத ஆலயங்களில் வழிபடப் போவதிலும் பார்க்க அவ்வாலயங்களைப் பகிஷ்கரிப்பது மிகவும் மேன்மையானது. பகிஷ்கரிப்பின் மூலம் ஆலயங்களின் வருமானம் நாளடைவில் குன்றும் குன்றிக்கொண்டு போகும் காலத்தில் ஆண்டவன் சந்நிதியில் கதவுகள் தாஞகவே திறக்கும். ஆலயங்கள் புனிதமானவை. அவற்றைப் போர்க்களமாக்க முனைவது அசட்டுத்தனமானது.’

---

கப்பட்டுள்ளார்.

திரு. க. ஜெயரத்தினம் என்பவரே துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் காயமடைந்தவராவார். இவரின் நிலை ஆபத்தாகவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கல்வி அமைச்சரிடமும் புகார் செய்துள்ளார்.

இது சம்பந்தமாக உடனடி விசாரணை நடாத்தும்படி மாவட்ட கல்வி இலாகாவுக்கு கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளாராம்.

கொங்கோ நாட்டின் முதலாவது ஜனதிபதி திரு. ஜோசெப் கசபுவு இன்று காலமாஞர். இவர் நீண்டகாலமாக சுகவீனமுற்றிருந்தார்.

# உற்பத்தி துறையில் சென்றஆண்டு ஒருசாதனை

## விவசாயிகளுக்கு அரசாங்க அதிபர்கள் உதவ வேண்டும் என்கிருர் பிரதமர்

கொழும்பு, செவ்.

‘‘இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி, சென்ற ஆண்டு, முன்னைய வருடங்களைவிட மிகவும் கூடுதலாக வளர்ச்சியடைந்திருப்பதற்கு அரசாங்கத்தின் உணவுற்பத்தித் திட்டமே காரணம்’’ என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நேற்று இங்கு தொடர்ந்து நடந்த 2ம் நாள் அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

தேசீய உற்பத்தியில் சென்ற வருடம் 8 வீதம் வளர்ச்சியடைந்திருப்பதாக மத்திய வங்கிக் கவர்னர் திரு. வில்லியம் தென்னக்கூன் தகவல் தெரிவித்திருப்பதாகக் கூறிய பிரதமர், 1966, 1967ம் வருடங்களில் தேசீய உற்பத்தி மிகவும் குன்றிய நிலையிலிருந்ததாகவும், தொடர்ந்து உற்பத்தி அதிகரிக்க, விவசாயிகளுக்கு அரசாங்க அதிபர்கள் உதவியளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வானிலை பற்றி அரசாங்க அதிபர்கள் மிகவும் கவனத்துடன் இருக்கவேண்டும்; தண்ணீர் விநியோகத்தில் கஷ்டம் ஏற்படும்போது தண்ணீர் விவசாயிகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

நீர்ப்பாசன இலாகா பிரதம அதிகாரி திரு. வி. என். ராஜரத்தினத்துக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

குடியேற்றத் திட்டத்தில் உள்ளவர்கள் பிரச்னை குறித்து இன்று அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் ஆராயப்படும். மகாநாடு இன்றுடன் முடிவடையும்.

# சியவச டிக்கற் பற்றி கல்வி மந்திரி

கொழும்பு, திங்கள்

சியவச டிக்கட்டை வாங்கும்படியோ, விற்கும்படியே ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தவில்லை என்று கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

# செல்வ வரி

புதுடில்லி, மார்ச் 24

பாரதப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியும் அவரது மந்திரி சபையை சேர்ந்த ஒன்பது பேரும் செல்வவரி கட்டுவதாகத் தெரிவிக்கப் பட்டது. இவர்களில் 5 பேர் கபினெட் மந்திரிகளும், 3 பேர் ஸ்டேட் மந்திரிகளும், ஒருவர் துணை மந்திரியும் ஆவர்.

# மலையாளப் பததிரிகையில் நடவடிக்கை

புதுடில்லி, மார்ச் 24

மலையாள வார இதழான ‘சிந்தா’ சீஞவிடமிருந்து விளம்பரங்களைப் பெற்றுக் கொண்டது சம்பந்தமாக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக இன்று லோக்சபையில் அறிவிக்கப்பட்டது.

மார்க்ஸீய கம்யூனிஸ்ட் சார்பான இப்பத்திரிகையின் நடவடிக்கை பற்றி கேரள அரசாங்கத்திடம் விபரம் கோரப்பட்டுள்ளது.

### லண்டன் தூதரகத்துள்

# பாகிஸ்தான் மாணவர் ஆர்ப்பாட்டம்

லண்டன், மார்ச் 24

லண்டனிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் இன்று பாகிஸ்தானைச் சேர்ந்த 35 மாணவர்கள் உள்ளே நுழைந்து தூதரக அலுவல்கள் ஒன்றும் நடைபெருது தடுத்தனர்.

சில மணிநேரம் இந்த நிலைமை நீடித்தது.

அயூப் அரசாங்கஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே தாம் இவ்வாறு செய்ததாக மாணவர் தலைவர் தெரிவித்தார்.

தூதரகத்திலிருந்த பாகிஸ்தான் ஜனதிபதி ஆயூப் கானின் படமும் வேறு சில படங்களும் கிழித்தெறியப் பட்டன.

# இன்னும் 5 தினங்கள்தான்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மோட்டார் வண்டிகளுக்கு 1969-ம் ஆண்டுக்கான புதிய லைசென்ஸ் பெறுவதற்கு இன்னும் 5 தினங்கள் மட்டுமேஇருப்பதாக மோட்டார் வாகன சொந்தக்காரர்களுக்கு பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திலுள்ள மோட்டார் பரிபாலனப் பகுதியில் புதிய லைசென்ஸ் இம்மாத முடிவுக்குள் பெறும்

(கா நி)

# ஜவுளி கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்

கள்ளக்கடத்தல் ஜவுளிகள் எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 5000 ரூபா பெறுமதியான ஜவுளிகள் யாழ்ப்பாணம் பஜாரிலுள்ள கடையொன்றிலிருந்து பொலிசால் கண்டு பிடிக்கப்பட்டு சுங்க இலாகாவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(கா. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு, காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாகத் தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி. குப்தி வித்யாதனைய, நிட்டம்புவ. 762

### தேவை

எமது தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 782

### காணவில்லை

8473, 8108, 8327 இலக்கமுடைய மூன்று ஐக்கிய லாப நிதிச்சங்கப் பாஸ்புத்தகங்கள் தை மாதம் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஐக்கிய லாபநிதிச் சங்கக் கந்தோரில் சேர்ப்பிக்கவும். 788

### விற்பனைக்கு

பழைய பத்திரிகைகள் தொகையாக விற்பனைக்குண்டு. எழுத்து மூலம் விலை விபரத்தோடு விண்ணப்பிக்கவும். ஜெனரல் மனேஜர், 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 789

### யாழ்ப்பாண மாநகரசபை

சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் நிர்மாணிப்பதற்கான கேள்வி அறிவித்தல்.

1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் திகதி வெளியான மேற்படி கேள்வி அறிவித்தலின் பிரகாரம்; கேள்விப் பத்திரங்கள் வழங்குதலும் கேள்வியின் முடிவு திகதியும் முறையே 1-4-69-ம் திகதி பகல் 12 மணி வரையும், 21-4-69 பகல் 12 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம் மாநகரசபை.
மாநகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்.
22-3-69. 1243

காணிக்கச்சேரி அறிவித்தல்

N 4284 பூநகரி பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் பூநகரி மன்னார் ரோட்டின் 13-ம் மைலுக்கும் 16-ம் மைலுக்கும் இடையில் உள்ள பகுதியில் ஏறத்தாள 5000 ஏக்கர் காணி முந்திரிகைச் செய்கைக்கென 25 50 ஏக்கர் துண்டுகளை வழங்குவதற்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் ஒரு காணிக்கச்சேரி நடாத்தப்படும்.

விண்ணப்பங்கள் 15-4-69க்கு முன்பு அனுப்பப்படவேண்டும். வேறு விபரங்களுக்கு 14846-ம் இலக்கம் கொண்ட 1969-3-21-ந் திகதி இலங்கை அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

யாழ்ப்பாண மாவட்ட
அரசாங்க அதிபர்

GP 2448

### கேள்விப்பத்திர விளம்பரம்


நெசவு ஆலை வளவிற்குள் களஞ்சிய அறை கட்டுவதற்கு மேற்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 1969-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 5-ந் திகதி பி. பகல் 4-00 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப்பத்திரம் சங்கானையிலுள்ள வலி-மேற்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் (வரையுள்ளது) காரியாலயத்தில் அதற்குரிய செலவாக ரூபா 5 - கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். இத்துடன் ரூபா 50 - வைப்புப் பணமாகக் கொடுக்கப்படவேண்டும். தெரிவின் பின் இவ்வைப்புப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

1242 தலைவர்.


மானிப்பாய்
### வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
ஞாயிறு, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - கல்பனா
நடித்த
**மதுரூஸ் To பாண்டிச்சேரி**

ராணி
யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
கல்யாணகுமார்,
முத்துராமன், தேவிகா
நடித்த
# நெஞ்சில் ஓர் ஆலயம்

சென். பற்றிக்ஸ் கல்லூரி

(முன்வரிசை: இடமிருந்து - வலம்) பி. எம். எஸ் பற்றிக், ஜே. பி. எவ். பொன்ராஜா, பி. பி. வர்ணகுலசிங்கி (காப்டன்), எஸ். ஏ. ஜோசப், எம். ஏ. கனகநாயகம், எம். சபாரட்ணம்.
(பின்வரிசை: இடமிருந்து - வலம்) ஏ. தர்மசீலன், ஏ. தர்மரட்ணம், ஏ. கே. எம். சந்திரசேகரா, ஜி. ஜி. ஜெயன்டிரா, எம். பெனடிற், ஜே. எம். ஜெயராஜா, ஜி. மரியதாஸ்.



யாழ்ப்பாணக் கல்லூரி

(முன்வரிசை: இடமிருந்து வலம்) சி. சண்முகம், என். குகநாதன், ஜே. எஸ். போல், எஸ். சண்முகா (காப்டன்) என். தயானந்தா, ரி. சூடாமணி, ஜி. பென்ஜமின்.
(பின்வரிசை: இடமிருந்து வலம்) பி. நமச்சிவாயம், வி. தங்கராசா, வி. சுந்தரராசா, ரி. குலநாதன், பி. கொட்பிறீட், றெபேட்.

52--வது கிரிக்கெட் போட்டி

# யாழ்ப்பாணகல்லூரி-சென்.பற்றிக்ஸ் கோஷ்டிகள் இன்று மோதும்

— நமது விளையாட்டு நிருபர் —

யாழ்பாணம், செவ்வாய்

**வடமாகாணத்தில் இவ்வருடத்தின் மற்றொரு மாபெரும் கிரிக்கெட் போட்டியான, சென். பற்றிக்ஸ்-யாழ்ப்பாணக் கல்லூரியின் 52-வது வருடாந்தப்போட்டி, இன்று சென்.பற்றிக்ஸ்கல்லூரிமைதானத்தில் ஆரம்பமாகிறது.**

இப்போட்டி வருடாவருடம் மிகவும் கோலாகலமாவும், அமைதியாகவும் நடைபெற்று வருகின்றது. இம்முறை இப்போட்டியைப் பார்வையிடுவதற்காக இருகல்லூரிகளின் பழைய மாணவர்களும் பிற இடங்களிலிருந்து தற்போது யாழ்ப்பாணம் வந்துகொண்டிருக்கின்றனர்.

கடந்த 51 வருடங்களிலும், சென். பற்றிக்ஸ் 19 தடவைகளும், வெட்டுக்

உலகில் மூன்று வருட அனுபவம் உடைய இவர் சிறந்த துடுப்பாடி வீரர். இம்முறை மகாஜனக் கல்லூரியுடன் நடந்தபோட்டியில் 111 ஓட்டங்களைப் பெற்றவர். மெதுவாகப் பந்து வீசுவதிலும் வல்லவர். தமது கல்லூரியில் ''சிறந்த கிரிக்கெட் வீரர்'' என்ற விருதைப்பெற்றவர். கடந்த வருடம் யாழ். தெரிவுக் கிரிக்கெட் [illegible] அங்கம் வகித்தவர்.

எஸ். ஏ. ஜோசப்:- இவர்

பந்தைத் தடுப்பதிலும் வல்லவர்.

எம். சபாரட்ணம்:- கிரிக்கெட் உலகில் இருவருட அனுபவம் உடைய இவர், ஆபத்தான நேரங்களில் வேகமாக ஓட்டங்களை எடுப்பதில் வல்லவர். மைதானத்தின் எப்பகுதியிலும் நின்று பந்தைத் தடுப்பதில் சிறந்தவர்.

நே. யோகேந்திரன்:- இவர் கிரிக்கெட் உலகிற்கு புதிய [illegible] இருந்தபோதிலும், இக்கோஷ்டியின் இடதுகை

மாக வரும் பந்தைத்தடுப்பதிலும் வல்லவர்.

**தர்மரட்ணம்:-** கிரிக்கெட் உலகில் ஒருவருட அனுபவம் உடையவர். வேகமாக பந்து வீசுவதில் வல்லவர். நிதானமாய் துடுப்பெடுத்தாடவும் கூடியவர்.

**ஜே. வி. எம். ஜெயராசா:-** இவர் இக்கோஷ்டியின் ஆரம்ப துடுப்பாடி வீரராக இருக்கின்றார். கிரிக்கெட் உலகில் ஒரு வருட அனுபவம் உடைய இவர், பந்து தடுப்பதிலும் வல்லவர்.

**எஸ். எம். இராசையா:-** கிரிக்கெட் உலகிற்குப் புதியவரான இவர், இக்கோஷ்டியின் ஆரம்ப துடுப்பாடி வீரராக இருக்கின்றார். விக்கெட்டின் அண்மையில் நின்று பந்தைத் தடுப்பதிலும் கெட்டிக்காரர்.

0 0 0

பவம் உடையஇவர், சென்ற வருடம் இக்கோஷ்டியின் காப்டனாக இருந்தவர். மெதுவாக பந்து வீசுவதிலும், திறமையாக துடுப்பெடுத்தாடுவதிலும் வல்லவர். விக்கெட்டின் அண்மையில் நின்று பந்தைத் தடுப்பதில் கெட்டிக்காரர்.

**ஜி. பெஞ்சமின்:-** 'சிறந்த கிரிக்கெட் வீரர்' என்ற விருதைப் பெற்ற இவர் கிரிக்கெட் உலகில் 3 வருட அனுபவம் உடையவர் மெதுவாகப் பந்துவீசக்கூடிய இவர் திறமையாகத் துடுப்பெடுத்தாடவும் கூடியவர்.

ஹாட்லிக் கல்லூரியுடன் நடந்த போட்டியில் 50 ஓட்டங்களைப் பெற்றவர். இவர் தான் இக்கோஷ்டியின் ஆரம்ப துடுப்படி வீரருங்கூட.

**என். குகநாதன்:-** கிரிக்கெட் உலகில் 3 வருட அனுபவம் உடைய இவர். இம்முறை நடந்தபோட்டிகளில் இருதடவை 50 ஓட்டங்களைப் பெற்ற சிறந்த துடுப்படி வீரர். சகல துறைகளிலும் திறமையாக விளையாடக்கூடியவர்.

**ஜே. எஸ். போல்:-** கிரிக்கெட் உலகில் மூன்று வருட

(3-ம் பக்கம் பார்க்க)


வடஇலங்கை சங்கீதசபை

# சங்கீதப் பரீட்சை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.

கல்யாணகுமார், முத்துராமன், தேவிகா நடித்த

# நெஞ்சில் ஓர் ஆலயம்

யாழ்ப்பாணம்
வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன், ராஜ் ஸ்ரீ, நாகேஷ், சுந்தரராஜன், ஜெயபாரதி நடித்த

# அனுபவி ராஜா அனுபவி

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹற்றன்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி ரங்கராவ், பானுமதி முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன், நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்

# பூவும் பொட்டும்

டைரக்ஷன்: தாதாமிராசி

இங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி, விஜயா, முத்துராமன், எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்

# ஊட்டி வரை உறவு

(ஈஸ்ட்மென் கலர்)

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன் எஸ். எஸ். வாசன் அவர்களால் ஈஸ்ட்மன் கலரில் படமாக்கப் பட்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்று வதையும் பார்க்கலாம்!


...இப்போட்டியைப் பார்வை யிடுவதற்காக இருகல்லூரி களின் பழைய மாணவர் களும் பிற இடங்களிலிருந்து தற்போது யாழ்ப்பாணம் வந்துகொண்டிருக்கின்ற னர்.

கடந்த 51 வருடங்களி லும், சென். பற்றிக்ஸ் 19 தடவைகளும், வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 13 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 8 போட்டிகள் சரிசமனாக முடிவுற்றன. மிகுதியான போட்டிகள் பல இடையூறு கள் காரணமாக நடை பெறாது இருந்திருக்கின் றன.

இம்முறை இப்போட்டி நடைபெறும் இருநாட்க ளும், மத்தியானம் 12 மணி க்கு ஆரம்பமாகி, மாலை 6 மணிக்கு முடிவடையும். இப்போட்டிக்கு திருவாளர் கள் பூபாலசிங்கமும், கனக லிங்கமும் மத்தியஸ்தர் களாகக் கடமையாற்றுகிறார் கள்.

இருகல்லூரி வீரர்களின் விபரங்கள் பின்வருமாறு:

**சென். பற்றிக்ஸ் வீரர்கள்**

பே. பா. வர்ணகுலசிங்கி:- இவர்தான் சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ் டியின் காப்டன். கிரிக்கெட் மெதுவாகப் பந்து வீசுவதி லும் வல்லவர். தமது கல் லூரியில் ''சிறந்த கிரிக் கெட் வீரர்'' என்ற விரு தைப்பெற்றவர். கடந்த வருடம் யாழ். தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டியில் அங்கம் வகித்தவர்.

எஸ். ஏ. ஜோசப்:- இவர் இக்கோஷ்டியின் உதவிக் காப்டன். அதிவேகமாக பந்தை வீசி விக்கெட்டை வீழ்த்துவதில் தீரர். கிரிக் கெட் உலகில் இருவருட அனுபவம் உடைய இவர், சென்றவருடம் யாழ். தெரிவுக்கோஷ்டியில் அங்கம் வகித்தவர். தமது கல்லூரி யில் ''சிறந்த கிரிக்கெட் வீரர்'' என்ற விருதையும் பெற்றவர்.

எம். பொன்ராசா:- கிரிக் கெட் உலகில் இருவருட அனுபவம் உவடய இவர் கவர்ச்சியாய் துடுப்பெடுத் தாடுவதில் வல்லவர். இவர் தான் இக்கோஷ்டியின் ''விக்கெட்கீப்பர்.

பே. எம். எஸ். பற்றிக்:- கிரிக்கெட் உலகில் இருவருட அனுபவம் உடையவர். சிறந்த துடிப் படி வீரராகிய இவர், பந்து தடுப்பதிலும் வல்லவர்.

எம். ஏ. கனகநாயகம்:- கிரிக்கெட் உலகில் இரு வருட அனுபவம் உடைய இவர், இக்கோஷ்டியின் ஆரம்ப பந்துவீச்சு வீரர். வேகமாக ஓட்டங்களை எடுப் பதில் வல்லவர். மைதானத் தின் எப்பகுதியிலும் நின்று பந்தைத் தடுப்பதில் சிறந்த வர்.

கே. யோகேந்திரன்:- இவர் கிரிக்கெட் உலகிற்கு புதிய வராய் இருந்தபோதிலும், இக்கோஷ்டியின் இடதுகை ஆரம்ப பந்து வீச்சு வீரராக இருக்கின்றார். இம்முறை சென், ஜோன்ஸ் கல்லூரியு டன் நடந்த போட்டியில் 40 ஓட்டங்களை வேகமாகப் பெற்றவர். விக்கெட்டுக்கு அண்மையில் நின்று பந்தைத் தடுப்பதில் வல்லவர்.

ஏ. ஜே. சந்திரசேகரா - கிரிக் கெட் உலகுக்கு புதியவரா கிய இவரும், துடுப்பெடுத் தாடுவதிலும் பந்தைத் தடுப்பதிலும் வல்லவர்.

எம். பெனடிற்:- முதல் வருட கிரிக்கெட் அனுபவ முடைய இவர், சிறந்த துடுப்படி வீரராய் இருந்து வருகின்றார்.

ஏ. எஸ் தர்மசிலன்:- இடது கையால் வேகமாகப் பந்து வீசிவதில் வல்லவர். கிரிக் கெட் உலகில் ஒருவருட அனுபவமுடைய இவர், பந்து தடுப்பதிலும் கெட் டிக்காரர்.

ஜி. மரியநாயகம்:- கிரிக் கெட் உலகிற்குப் புதியவ ராக இருந்தாலும், இக்கோ ஷ்டியின் ஆரம்ப துடுப்படி வீரராக இருக்கின்றார். வேக

எஸ். எம். இராசையா:- கிரிக்கெட் உலகிற்குப் புதிய வரான இவர், இக்கோஷ்டி யின் ஆரம்ப துடுப்படி வீர ராக இருக்கின்றார். விக் கெட்டின் அண்மையில் நின்று பந்தைத் தடுப்பதி லும் கெட்டிக்காரர்.

0 0 0

**யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்கள்**

ரி. எஸ். சண்முகா:- இவர் தான் இக்கோஷ்டியின் காப் டன். 5 வருட கிரிக்கெட் அனுபவமுடைய இவர், சிறந்த பந்து வீச்சு வீரர். இம்முறை நடைபெற்ற போட்டிகளில் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்தியுள் ளார். திறமையான துடுப் பெடுத்தாடக்கூடிய இவர், மைதானத்தில் எப்பகுதியி லும் நின்று பந்தைத்தடுப் பதில் வல்லவர்.

என். தயானந்தன்:- கிரிக் கெட் உலகில் மூன்று வருட அனுபவமுடைய இவர், இக் கோஷ்டியின் உதவிக் காப்டனாக இருக்கின்றார். இடதுகைப்பக்கம் நின்று துடுப்பெடுத்தாடுவதில் வல் லவர். இவர் தமது கல்லூ ரியில் 'சிறந்த கிரிக்கெட் வீரர்' என்ற விருதைப்பெற் றவர். சென்றவருடம் யாழ். தெரிவுக் கோஷ்டியிலும் அங்கம் வகித்தவர்.

சி. சண்முகம்;- கிரிக் கெட் உலகில் 4 வருட அனு... இவர் திறமையாகத் துடுப் பெடுத்தாடவும் கூடியவர்.

...கெட் உலகில் மூன்று வருட

(3-ம் பக்கம் பார்க்க)

வடஇலங்கை சங்கீதசபை

# சங்கீதப் பரீட்சை முடிவுகள்

**(நேற்றைய தொடர்ச்சி)**

யாழ்ப்பாணம், செவ். வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப் பட்ட 1968-ம் வருட சங் கீத பரீட்சைகளின் முடிவு விபரம்:

## மூன்றும் பகுதி

**யாழ்ப்பாணம்**

சாதாரண பிரிவு:
வாய்ப்பாட்டு

செ ஜானகி, செ சாவித் திரி. கு சூரியகுமாரி, ஜோ டெறின் பிரேமா த புஷ் பாம்பிகை, த ஞானமனே கரி க வரதவாணி ஆ நேச ரஞ்சினி கு சக்திதேவி இ யோகரத்தினம் கு ஜானகி ம ராஜலட்சுமி சே மோக னராசா இ சத்தியராணி ந ஜெயகுமாரி, பா பகவதி, ச கிரிதரி, ப புனிதவதி, பொ ஜெயவதனி, ந சத்தி யவதி, கா கமலாதேவி, வே கௌரி, அ கமலா ஜனி, வெ சுப்புலச்சுமி, பொ ஜெயஅழகி சு பத் மாவதி, பு மனோகரி, சீ ஸ்ரீ கமலாம்பிகாதேவி, இ நேசராணி, இ ராஜினி, வே றூபி சுமதி, சோ விஜ யாம்பாள், ஆ ரூபரஞ்சனி நா தயாதேவி, ச மரகத வல்லி, ச புனிதவதி, ச அமிர்தாதேவி, சி சிவ சாந்தி, து துரைரஜனி, சு ஞானரஞ்சிதம், தி மீன லா ஜனி, இ ஜெயராணி, சி ஆனந்தேஸ்வரி, ச செந் தூர் செல்வி, ந பத்மினி, இ பத்மாதேவி, மு இரா ஜவதனி, சு பராசக்தி, ந. ராம்குமார், ந. இலட்சு மணகுமார், அ மனோரஞ் சன், பொ விமலாதேவி. வ சுமணவதி, கு பவளராணி, கு கமலமனோகரி, அ சாந் தினி, செ செல்வச்செந்தி, பொ திருமகள், வி ஜெக ராசலட்சுமி, அ புனிதமலர், சூ கலாஈஸ்வரன், அ சார தாமணி, ஞா ரதி, வி வன ஜாம்பாள்,

(தொடரும்)


ராஜா 71வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
2-30, 6-30, 9-45
எம். ஜி, ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா, போயா 2-30
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த
தேர்த்திருவிழா

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Pre-Poya, Poya 10 30 a.m
John Wyne, Dean Martin
in
SONS OF KACIELDER

REGAL at Jaffna
Daily 4-45, 7& 9-45 P.m
Muga Takewaki,
Jitsuko Yoshimura
in
SECRET AGENT 101
(color)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்குய்லாத் தீவில் சவப்பெட்டி ஊர்வலம்

## பிரிட்டிஷ் கொள்கைக்கு பலத்த எதிர்ப்பு

லண்டன், மார்ச் 24

கெரிபியன் தீவான அங்குய்லாவில் ஆயுதங்கள் வைத்திருக்கும் உள்ளூர் வாசிகள் இந்தமாதஇறுதிக்குள் அவைகளை திருப்பிக் கொடுக்கும் பட்சத்தில் அவர்களுககு மன்னிப்பு அளிக்கப்படுமென்று அங்கு போய் இருக்கும் பிரிட்டிஷ் அதிகாரியான திரு. லீ அறிவித்திருக்கிறார்.

பிரிட்டிஷ் கமிஷன் அங்குய்லாவில் உறுதியான ஆட்சிக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும். அதே வேளையில் அந்த நாட்டின் தலைவர் திரு. வெப்ஸ்டர் நியூயோர்க்கில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புப்பற்றி ஐ. நா.வில் புகார் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் கமிஷனர் லீக்கு எதிராக நேற்று மீண்டும் அங்குய்லாவில் நூற்றுக் கணக்கான சுதேசிகள் ஆர்பாட்டங்கள் நடத்தினார்கள் தேவாலயம் சென்று திரும்பிக்கொண்டிருந்த இந்த சுதேசிகள் திரு லீயின் கொடும்பாவி சவப் பெட்டியை தெருக்கள் வழியாக அவரது அலுவலகக் கட்டிடத்துக்கு அழுதுகொண்டு எடுத்துச் சென்றார்கள்.

விருப்பமில்லாத ஒருவரை வெளியேற்றுவதற்கு இந்தப் பகுதி மக்கள் வழக்கமாகவே இம்மாதிரித்தான் ஆர்பாட்டங்கள் செய்வர். அலுவலகக் கட்டிடத்தின் முன்னால் ஏராளமானவர்கள் அமர்ந்துகொண்டு 24 மணி நேரமும் அங்கிருந்து திரு லீ தமது வேலைகளைச் செய்யாமல் தடுக்கப் போவதாக கூறினார்கள்.

செத்தவீட்டில் அழுவது போல் கூக்குரலிட்டு அழுதபடி லீயை வெளியேற்றும்படி அவர்கள் கோஷமிட்டார்கள்.

இதற்கிடையில் அங்குய்லாவில் லண்டன் பொலிசார் நிலைகொண்ட பின்னர் துருப்புகள் விலக்கிக் கொள்ளப்படுவார்கள் என்றும் உள்ளூர் வாசிகள் பயிற்சி பெற்ற பின்னர் லண்டன் பொலிசாரும் விலக்கிக் கொள்ளப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்குய்லாவில் பிரிட்டன் ராணுவ நடவடிக்கை எடுத்ததை எதிர்த்து லண்டனிலும் ஆர்பாட்டங்கள்இடம் பெற்றன

# ம. பொ. சி. போராட்டம்: திகதி அறிவித்துவிட்டார்

சென்னை, மார்ச் 24

மாநில சுயாட்சி கோரி தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருந்தார் அல்லவா? இப்பொழுதுஅந்தப் போராட்டத்துக்கான திகதியையும் ம.பொ.சி. அறிவித்திருக்கிறார். தமிழ் நாட்டில் உள்ள மத்திய அரசுக் காரியாலயங்கள் முன் இந்த மறியல் போராட்டம் நடைபெறும்

திருசிவஞானம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில்காங்கிரஸ்ஆட்சி நடைபெறுத மாநிலங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டு சுயாட்சிகோரிக்கை பற்றி விளக்கப் போவதாகவும், அந்தமாநிலசட்டசபைகளில் தீர்மானங்கள் நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பும்படி கோருவார் என்றும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

ஜூலைமாதம் தமிழரசுக் கழக செயற் குழு கூட்டம் கூடி எந்தமுறையில் போராட்டம் நடத்துவது என்பதை தீர்மானிக்கும்.

அதன் பிறகு ஆகஸ்டு மாதம் போராட்டம் நடக்கும். போராட்டம் டெல்லி அரசாங்கத்திற்கு எதிராகவேஇருக்கும்மாநிலஅரசை எதிர்த்து அல்ல!

தமிழ்நாட்டில் உள்ள டெல்லிஅரசாங்க அலுவலங்கள் முன்பு போராட்டம் நடக்கும்.

ஆனாலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்து சிறைக்கு அனுப்ப வேண்டியது கருணாநிதி தலைமையிலுள்ள அரசாங்கத்தின் கடமை. அதனால் தமிழரசு கட்சியினர் கருணாநிதிமீது

ஓ. பாகிஸ்தானில்

# பொலிசாரால் தேடப்பட்டவர் றிமாண்டிலேயே இருந்தார்

யாழ்ப்பாணம். செவ்.

களவு வழக்கொன்றில் தேடப்பட்டுவந்த ஒருவரை றிமாண்டில் கண்டனராம் பொலிசார். இவரைத்தேடித்திரிந்த பொலிசார் இவர் மீண்டும் ஒரு வழக்குசம்பந்தமாக றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கக் கண்டனர்.

கல்வியங்காட்டுச் சந்தியில் ஒருமாதத்திற்கு முன்னர் ஜவுளிக்கடை களவொன்றுசம்பந்தமாகவே ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவாஜி என்று குறிப்பிட்ட நபர் தேடப்பட்டு வந்தார்

இவர்ஏற்கனவேயே றிமாண்டில் இருந்த போதும் மேலும் சச்சிதானந்தன், ஸ்ரீஸ்கந்தராசா ஆகிய இரு வாலிபர்களை கோப்பாய் பொலிசார் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். களவு போன ஜவுளிகளில் சிலவும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன. (கா. நி)

# மாதகல் துறைமுகத்தில் வெளிச்சவீடுகட்ட முடிவு

## பண்டத்தரிப்பு கி. ச. தீர்மானம்

உரும்பராய். திங்கள்

மாதகல் துறைமுகத்தில் மிக விரைவில் வெளிச்ச வீடு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதற்கானநடவடிக்கைகளில் பண்டத்தரிப்பு கிராமசபை ஈடுபட்டுள்ளது.

மாதகல் துறைமுகத்திலிருந்து இப்பகுதியிலுள்ள பல கடற் தொழிலாளர் ஆழ்கடலுக்குச் செல்வதாகவும் அவர்கள் கரை திரும்புவதில் மிக்க சிரமப்படுவதாகவும் பண்டத்தரிப்பு கிராமசபை 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. ச. ப. யோசேப்பு கொண்டு வந்த பிரேரணை கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இதற்கான ஆக்கபூர்வ வேலைகளில் கிராம சபை விரைவில் ஈடுபடும்.

## வேலணைக் கி. ச. தேர்தல் அபேட்சகர் விபரம்

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணைக் கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1-ம் வட்டாரம் சடையர் கதிரவேலு. சதாசிவம் கணபதிப்பிள்ளை, நம்சிவாயம் நல்லதம்பி.

2-ம் வட்டாரம் பொன்னையா நமசிவாயம். இராமலிங்கம் சிவசிதம்பரம்.

3-ம் வட்டாரம்; வல்லிபுரம் சண்முகராசா, நமசிவாயம் பொன்னையா.

4-ம் வட்டாரம்: கனகரத்தின [illegible] லர் [illegible] துரை கார்த்திகேசு கபி

நெடுந்தீவில்


## கண் நிபுணரின் இலவச சிகிச்சை

யாழ்ப்பாணம், செவ்.

நெடுந்தீவிலுள்ள கண் நோயாளர்களைப் பார்வையிடுவதற்காக கொழும்பு வைத்திய சிகிச்சை நிபுணரான டாக்கர் ஆர். பரராசிங்கம் இம் மாதம் 30-ம் திகதி நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்கின்றார்

கொழும்பிலிருந்து இரண்டு கண்வைத்தியடாக்டர்களுடன் இங்கு வரும் டாக்டர் பரராசிங்கம் அவசர சிகிச்சைகளை உடன் நடாத்துவார். (கா. நி)

## வீதி திருத்த நன்கொடை




அம்பாறை மாவட்ட விவசாய மன்னரும் நிந்தாவூர் 3-ம் குறிச்சியைச் சேர்ந்தவருமான திரு. எம். பி. ஆதம்பாவா பிறவுண் அன் கொம்பனி விவசாயப் பகுதி உதவி மனேஜர் திரு. லெஸ்லி சரவணமுத்துவிடமிருந்து 135-வது மசேய்பேர் கூசன் ட்ருக்டரைப் பெற்றுக்கொள்கின்றார்.

"பயிற்சிபெற்ற ஊழியர்இல்லாததால்

# கூட்டுறவு சங்கங்களில் நிர்வாக ஊழல்" - விசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்.

பயிற்சிபெற்ற ஊழியர்கள் கடமையாற்றாத காரணத்தால், அதிகமான கூட்டுறவு இயக்கங்களில், நிர்வாக ஊழல் காணப்படுவதாக, யாழ்ப்பாணம் கூட்டுறவு பயிற்சி பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டுறவு கமிஷன் விசாரணைகளில் சாட்சியமளிக்கையில் சுட்டிக்காட்டினர்.

நிர்வாக விஷயத்தில் ஊழியர்கள் முக்கிய பங்கெடுத்துக்கொள்வதால், பயிற்சி பெற்ற ஊழியர்களை கூட்டுறவுஇயக்கங்களில் நியமிப்பது அவசியமென்றும், தற்பொழுது கூட்டுறவு கமிட்டிகள் பயிற்சிபெற்ற ஊழியர்களை நியமிப்பதில்லைஎன்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

ஊழியர்களை தெரிந்தெடுக்கும் விஷயத்தைகூட்டுறவு சேவைக்கமிஷன் ஒன்று நிறுவி அதனிடம் ஒப்படைக்கவேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டது; இக் கமிஷன் மாவட்டரீதியிலும் தேசியரீதியிலும், கடமையாற்றலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கூட்டுற

## விபுலாநந்தர் ஞாபகார்த்த நூல் நிலையம்

கல்முனை திங்கள்

காரைதீவில் விபுலானந்தரின் பெயரில் பொது நூல் நிலையமொன்றை காரைதீவு கிராமசபையினர் அமைத்து வருகின்றனர்.

இந்நூல் நிலையத்தின் முன்னால் விபுலானந்தர் சிலையும் அமைக்கப்படவிருக்கிறது. இச் சிலையை ஆசிரியர் திரு. நல்லரத்தினம் செய்துவருகிறார்.

## இவர்களுக்கு இடமாற்றம்

பருத்தித்துறை திங்கள்

வல்வெட்டித்துறை பட்டின சபை வருமான வேலை ஓவசியர் திரு. கே. மார்க்கண்டு திருகோணமலைப் பகுதியிலுள்ள கிளிவெட்டி கிராமசபைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

வங்காலை கிராமசபை எழுதுவினைஞர் திரு எம். தில்லைநாதன் கிளிவெட்டிக் கிராமசபைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சங்கானைப் பட்டின சபை

## கலை மன்றம் அங்குரார்ப்பணம்

உடுப்பிட்டி திங்கள்

"மன்றங்களை அமைத்தால் மட்டும் போதாது. அவைகள் மூலம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பல அரிய சேவைகள் செய்ய வேண்டும். இயல், இசை, நாடகம் மூன்றிற்கும் முதலிடம் கொடுத்து அவற்றால் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும் ஒரு மன்றத்தை அமைத்து ஆண்டுவிழாக்களை மட்டும் கொண்டாடுவதால் மன்றம் வளராது" என வதிரி வாணி கலைமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் உடுபிட்டித் தமிழ் மன்ற இணைச் செயலாளர் திரு. எஸ். ஆறுமுகம் கூறினார். திரு. அரியகுணராசா தலைமைவகித்தார். திரு. கே. பாலசிங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.பொ.சி. அறிவித்திருக்கி றார். தமிழ் நாட்டில் உள்ள மத்திய அரசுக் காரியாலயங் கள் முன் இந்த மறியல் போராட்டம் நடை பெறும் கோருவார் என்றும் தெரி வித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:- ஜூலைமாதம் தமிழரசுக் கழக செயற் குழு கூட்டம்

**இ. பாகிஸ்தானில்**

# மூன்று வாரத்தில் 300 பேர் படுகொலை

## 10 ஆயிரம் வீடுகள் தீக்கிரை

டாக்கா மார்ச் 24

கிழக்குப் பாகிஸ்தானில் கடந்த மூன்று வாரங்க ளில் மட்டும் 300 பேர் படு கொலைகளுக் குள்ளாகியிருக் கிறார்கள் என்று கருதப்படு கிறது. இதில் பெண்கள், குழந்தைகளும் அடங்குவர் பத்தாயியம் வீடுகள் தீக்கி ரையாக்கப் பட்டன. 50ஆயி ரம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றர்.

நேற்று பாகிஸ்தான் தேசிய தினம் கொண்டா டப்பட்து. கிழக்குப் பாகிஸ் தான் கவர்னர். பல்வேறு தொழில் துறைகளிலுமுள்ள தொழிலார்களையும்தொழில் அமைதி ஏற்படஒத்துழைக்க வேண்டுகோள் விடுத்திருக்கு ர் கிழக்குப்பாகிஸ்தானில்அர சாங்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து அமைதியை ஏற்ப டுத்த அவர் உறுதி கொண் டிருப்பதாகவும்அறிவித்துள் ளார். மேற்கு பாகிஸ்தான் கவர்னரும்நாட்டில்மீண்டும் மாமூல் நிலைமையை ஏற்ப டுத்தும் முயற்சிகளில் தொ டர்ந்து ஈடுபட்டுவருகிறார்.

# மே. வங்க எல்லையில் பாக் -இந்திய மோதல்

## 3 இந்தியர் காயமடைந்தனர்

புதுடில்லி, மார்ச் 24

நேற்று மேற்கு வங்காள எல்லையில் கிழக்குப் பாகிஸ் தான் துருப்புகளும் இந்திய எல்லைக்காவல் படையினருக் குமிடையில் ஏற்பட்ட மோதலில்குறைந்தது மூன்று இந்திய வீரர்களாவது காய மடைந்திருப்பார்களென்று இங்கு அறிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை ஏற் பட்ட ஒரு மோதலின்பின் அமைதி ஏற்பட்டிருப்பதாக வும் நேற்று மீண்டும் கிழக் குப் பாகிஸ்தானியர் முத லில் சுடத் தொடங்கியதால் இந்தியா தற்பாதுகாப்புக் காகத் திருப்பிச் சுட்டதாக வும் அறிவிக்கப் பட்டது. கடந்த சனிக்கிழமையன்று ஓர் இந்திய சிப்பாய் காய மடைந்தார்.

இந்தியத் தரப்பில் இச் சம்பவம்பற்றி தகவல்வெளி யிடப்பட்டபோதிலும் பாகி ஸ்தான் அரசாங்கம் ஒன் றுமே கூருமல் மௌனம் சாதிக்கின்றது. இந்திய வானெலியில் இச்சம்பவம் முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பப்பட்டபோதிலும் பாகிஸ்தான் ரேடியோ இச் செய்திபற்றி பிரஸ்தாபிக் கவே இல்லை.

# ரொடீஷிய பிரச்னையை ஐ.நா.தீர்க்க முடியாது

நியூயோர்க், மார்ச். 20

''தென் ரொடீஷியாவில் அயன்ஸ்மித் ஆட்சிக்கெதி ரான ஐ. நாவின் நடவடிக் கைகள் போதுமானதாக இல்லை. தென்னுபிரிக்கா வும், போர்த்துக்கல்லும் தொடர்ந்து அதற்கு உதவி கள் செய்துவருகின்றன.''

இவ்வாறு ஐ. நாவின் காலனி நாடுகள்பற்றிய விசேஷ கூட்டத்தில் உரை நிகழ்த்திய இந்தியத் தூதர் திரு. கென்ஸ் குறிப்பிட் டார்.

திரு. கென்ஸ் தொடர்ந்து கூறியதாவது:- ''ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் உறு ப்பு நாடுகள் செயற்படுத்த வேண்டியவைகளைச் செய்து வைக்க ஐ. நா. விஞல்முடிய வில்லை. ஐ. நா தென் ரொடீஷிய பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் என்று நம்பி யிருப்பது ஒருநாட்டுக்குள்ள சர்வதேச பொறுப்பை தட் டிக் கழிப்பதாகும்.

டெல்லிஅரசாங்க அலுவலங் கள் முன்பு போராட்டம் நடக்கும்.

ஆனாலும் போராட்டத் தில் ஈடுபட்டவர்களை கைது செய்து சிறைக்கு அனுப்ப வேண்டியது கருணாநிதி தலை மையிலுள்ளஅரசாங்கத்தின் கடமை. அதனால் தமிழரசு கட்சியினர் கருணாநிதிமீது கோபமோ ஆத்திரமோ கொள்ளக்கூடாது. அரசாங் கம் தனது கடமையை செய் கிறது என்றே கருத வேண் டும்இவ்வாறு மபொ.சிவஞா னம் கூறினார்.

**இலங்கைபயணம்**

மா. பொ.சி. தமது இல ங்கை விஜயம் பற்றியும் அறிக்கையில் குறிப்பிட்டி க்கிறார்.

ஏப்ரல் மாதம் இலங்கைக் குப் போவேன் அங்கு 10 நாள் ஓய்வு எடுத்தபின் காங்கிரஸ் ஆட்சி நடை பெறாத மாநிலங்களுக்கு சுற்றுப்பிரயாணம் மேற் கொள்வேன் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# சைனாய் பாலைவனத்தில் இஸ்ரேல் துருப்புகள்

அம்மான், மார்ச் 24

சைனாய் பாலைவனத்தில் சுவேஸ் எல்லையை நோக்கி ஏராளமான இஸ்ரேலியதுரு ப்புகள் நகர்ந்து கொண்டிருப்பதாக அரபு கொமாண்டோ ஸ்தா பனமான அல்பட்டா அறி வித்திருக்கிறது. கவசமோட் டார்களையும் பீரங்கிகளையும் இவர்கள் எடுத்துச் செல்கி றார்களாம்.

**அரபு வாலிபருக்கு ஆயுள் தண்டனை**

இஸ்ரேலிய நீதி மன்றம் அரபு வாலிபர் ஒருவருக்கு ஆயுள்தண்டனை விதித்திருக் கிறது. எறிகுண்டு வீசி கொலைபுரிய முயன்றதாக இவர்மீது குற்றம் சாட்டப் பட்டிருந்தது. இந்தச் சம்ப வத்தில் 45 பேர்காயமடைந் தார்கள். 17 வயதானஇந்த அரபு வாலிபர் தமது குற் றத்தை ஒப்புக்கொண்டார்.

# 'அன்பில்மலர்ந்த அமரகாவியம்'

உடும்பராய், திங்கள்

திருமுறைக் கலாமன்றத் தினரின் ஆதரவில் இம் மாதம் 30-ம் திகதி உரும்ப ராய் புனித மைக்கல் ஆலய முன்றலில் 'அன்பில் மலர் ந்த அமரகாவியம்' என்ற பக்தி இசை நாடகம்மேடை யேற்றப்படவிருக்கிறது இவ்விலவச நாடகம் கிறி ஸ்துநாதரின் திருப்பாடுகளை மையமாகக்கொண்டது.

ஊயா நமசிவாயம். இராம லிங்கம் சிவசிதம்பரம்.

3-ம் வட்டாரம்; வல்லி புரம் சண்முகராசா, நமசி வாயம் பொன்னையா.

4-ம் வட்டாரம்: கனகரத் தினம் சுப்பிரமணியம், செல் லர் சோமசுந்தரம். ராஜ துரை கார்த்திகேசு கயி லாசபிள்ளை சங்கரப்பிள்ளை.

5-ம் வட்டாரம் சுந்தரப் பிள்ளை சாந்தலிங்கம், சுப் பிரமணியம்பத்திரம்கொண் டான்,

6-ம் வட்டாரம் முத்துத் தம்பி குலசேகரம்பிள்ளை (தற்போதைய தலைவர்) ஆறுமுகம் முத்தன், நாக முத்து ஐயம்பிள்ளை, கந் தையா பத்மநாதன்.

7-ம் வட்டாரம்: சதாசி வம் கிரிவாசன். தம்பு சாந் தலிங்கம், மருதையனார் கனகசபாபதிப்பிள்ளை.

8-ம் வட்டாரம்: பாலசுப் பிரமணியம் சபாபதி, நாக நாதன் வடிவேலு, கந் தையா செல்வநாயகம், பொன்னப்பா சண்முகநா தன்.

9,ம் வட்டாரம்: மார்க் கண்டு ஆறுமுகம். பசுபதி கந்தசாமி, நாகேந்திரர் அருமைநாயகம்.

**ஜீவனும்ச வழக்கில்**

# 6 பேருக்கு வாறண்ட்

வல்வெட்டித்துறை, திங்கள்

ஜீவனும்ச வழக்கில் நீதி மன்றத்துக்கு ஆஜராகாத ஆறுபேருக்கு வாறண்ட் பிறப்பித்துள்ளார் நீத வான். பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா இதைப் பிறப் பித்தார்.

ந. தங்கவேலாயுதம். து, சந்திரன், க. தவரத்தினம். வேலன் சிவயோகன், மா. கிட்டினன், க. மணியம் ஆகியோர் தங்கள் மனைவி மாருக்கு ஜீவனும்சம் கட்ட வில்லையென இவ்வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. வாறண்ட் பிறப்பித்த நீத வான் அடுத்த மாதம் 8-ம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

# தபால்களை என்ன செய்வது

முல்லைத்தீவு. திங்கள்

முல்லைத்தீவு தபால்நிலை யத்தில்தபால்களை அனுப்புவ தற்கு போதிய அளவு சாக்கு கள் இல்லாததால் தபால் களை என்ன செய்வதென்று அறியாது தபாலதிபர் திண் டாடுவதாக அறியப்படுகின் றது. இதுபற்றி மேலிடத் துக்கு அறிவித்தும் இதுவரை உதவிகிடைக்கவில்லையாம்.

களுடன் இங்கு வரும் டாக் டர் பரராசிங்கம் அவசர சிகிச்சைகளை உடன் நடாத் துவார். (கா.நி)

# வீதி திருத்த நன்கொடை

அல்லைப்பிட்டி, திங்கள்

அல்லைப்பிட்டிச் சந்தியி லிருந்து மண்கும்பான் ஊடாக வேலணை செல்வ தற்காக புதிய வீதியொன்று அமைப்பதற்குஉள்ளூராட்சி அமைச்சு பத்தாயிரம் ரூபா நன்கொடையாக வழங்கி யுள்ளது. அண்மையில் அல் லைப்பிட்டிக்கு விஜயம் செய்த அமைச்சரிடம் இப் பகுதி மக்கள் இக்கோரிக் கையைச் சமர்ப்பித்திருந்த னர்.

**ந. ச. தலைவரின் புகார் மீது விசாரணை**

திருகோணமலை, திங்கள்

திருக்கோணமலை சுகா தார சேவை அலுவலக நிர் வாகம் பற்றி நகரசபைத் தலைவர் திரு. எஸ். சிவா னந்தன் சுமத்திய புகார்கள் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி சுகாதார சேவை இலாகா அதிபர் உத்தரவிட்டுள்ளார். விசா ரணையில் குற்றவாளிகளெ னத் தெரிகிற சமயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படுமென்றும் நகரத்தின் அத்துமீறி குடிசைகள் அமைப்போர்மீது நீதிமன் றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும்படியும் சுகாதார சேவை இலாகாத் தலைவர் நகரசபைத் தலைவருக்கு அறிவித்துள்ளார்,

# வருடாந்த விழா

யாழ்ப்பாணம், செவ்

கந்தர்மடம் முற்போக்கு வாலிபர் சங்கத்தின் வரு டாந்த விழா இம்மாதம் 26-ம் திகதி திரு.சு. இராசு தலைமையில் நடைபெற விருக்கின்றது. விழா வில் கலை நிகழ்ச்சிகளும் நடை பெறும். [கா.நி]

# சமயசொற்பொழிவு

வல்வெட்டித்துறை, திங்கள்

அல்வாய் சிவபதி இல்லப் பிரார்த்தனை மண்டபத் தில் நடைபெற்ற சமயச் சொற்பொழிவுக் கூட்டத் தில் கொழும்பு இராம கிருஷ்ணமிசனைச் சேர்ந்த ஸ்ரீ ரங்காநந்தா சுவாமிஜி கலந்து கொண்டார். ஜெய ந்திநகர் ஸ்ரீ வடிவேலு சுவாமி தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

சேவைக்கமிஷன் ஒன்று நிறுவி அதனிடம் ஒப்படை க்கவேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டது இக் கமிஷன் மாவட்டரீதியிலும் தேசியரீதியிலும், கடமை யாற்றலாமென்றும் தெரி விக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கூட்டுற வுப் பயிற்சி பாடசாலை பழைய மாணவர் சங்க தூதுக்குழுவிற்கு திரு. எஸ். ஹண்டி பேரின்பநாயகம் தலைமை தாங்கினார். தற் பொழுது ஊழியர்கள் தேர் ந்தெடுக்கப்படும் விதம் திருப்தியளிக்கவில்லையென் றும் தூதுக் கோஷ்டியினர் தெரிவித்தனர்.

வடபகுதி கூட்டுறவு சம் மேளனம், திரு. ஆர். இராச ரத்தினம் தலைமையில் இர ண்டாவது தடவையாக சாட்சியமளித்த போது, பெரிய அளவில் ஆரம்ப சங் கங்களை நிறுவுவதை தாங் கள் எதிர்ப்பதாகக் கூறி னர். கடனுதவி சங்கங்களை புதுப்பித்து, நல்ல முறை யில் நடைபெறச் செய்யலா மென்றும் அவர்கள் தெரி வித்தனர்.

ஒரே தேசிய ஸ்தாபனத் தில் இருமொழிகளிலும் நிர் வாகத்தை நடத்துவதில், தடைகள் இருக்கின்றதா என கமிஷன்தலைவர் கேட்ட போது' திரு. இராசரத்தி னம் நடைமுறையில் கஷ் டம் இருப்பதாகத் தெரிவித் தார். உலகமெங்கும் பல இனமக்கள் வாழும் நாடுக ளில் இப்படியான கஷ்டங் கள் இருப்பதாகத் தலைவர் குறிப்பிட்டார்.

**சியவசவை எதிர்கக**

# அ. இ. மாணவர் இயக்கம்

அளவெட்டி, திங்கள்

'சியவச' அதிஷ்டலாபச் சீட்டைஎதிர்த்துப்போராட அகில இலங்கை மாணவர் இயக்கமொன்று உடுவில் பெச்சி ஆலய முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

திரு. பி. பாலசுப்பிரமணி யம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

சியவச விற்பனையை எதிர் த்து கிராமங்கள் தோறும் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத் துவதென்றும், இதை விற் பனை செய்யாமல் விடும் வரை போராடுவதென்றும் இக்கூட்டத்தில் முடிவுசெய் யப்பட்டது

சபா புஷ்பநாதன், சி. செல்லையா, ஜெயநாயகம், செல்வராசா ஆகியோர் உட் படப் பலரும் இக்கூட்டத் தில் உரையாற்றினர்.

தியிலுள்ள கிளிவெட்டி கிராமசபைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

வங்காலை கிராமசபை எழுதுவினைஞர் திரு எம். தில்லைநாதன் கிளிவெட்டிக் கிராமசபைக்கு மாற்றப்பட் டுள்ளார்.

சங்கானைப் பட்டின சபை யைச் சேர்ந்த திருவாளர் கள் எம். இராசசுந்தரம், வீ: தங்கராசா ஆகியோர் யாழ் ப்பாணம் முனிசிப்பல் சபை க்கும் திரு. எஸ். கந்தையா வல்வெட்டித்துறைப் பட் டினசபைக்கும் மாற்றப்பட் டுள்ளனர். வல்வெட்டித் துறை பட்டின சபையைச் சேர்ந்த திரு எம். இராச ரத்தினம் சங்கானைப்பட்டின சபைக்கு மாற்றப்பட்டுள் ளார் புங்குடுதீவு வருமான வேலை ஓவசியர் திரு எம் பூபாலசிங்கம் புத்தளம் நகர சபைக்கு எழுதுவினைஞராக மாற்றப்பட்டுள்ளார் ஊர் காவற்றுறைப் பட்டினசபை யைச் சேர்ந்த திரு கே. தனி நாயகம் நெடுந்தீவு கிராம சபைக்கு மாற்றப்பட்டுள் ளார்.

# மீண்டும் வலியுறுத்தப்படும்

யாழ்பாணம் செவ்வாய்

நல்லூரில் நிரந்தர பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டு என பல காலமாக விடுக்கப் பட்டுவந்த வேண்டுகோள் மீண்டும் வலியுறுத்தப்பட விருக்கின்றது.

இதற்கான முன்னறிவித்தலை நல்லூர் ம நகரசபை உறுப் பினரான திரு. அ.நடராஜா கொடுத்துள்ளார்.

இம் மாதம் 27-ம் திகதி நடைபெறவிருக்கும் யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் கொண்டுவரவிருக்கும் பிரே ரணையில் திரு. அ. நடராஜா குறிப்பிட்டதாவது.

நல்லூர் கந்தசாமிகோயில் உற்சவ காலங்களில் அமைக் கப்படும் தற்காலிகபொலிஸ் நிலையத்தை ஒரு நிரந்தர பொலிஸ் நிலையமாகநல்லூர் கந்தசாமி கோயிலுக்கும் முத்திரைச் சந்திக்குமிடை யில் அமைத்துத் தருமாறு பொலிஸ் அதிபரை வேண்டு வது.

(கா நி)

# கொக்குவில் கி. ச. கூட்டம்

கொக்குவில் செவ்வாய்

கொக்குவில் கிராமசபை யின் மாதாந்த கூட்டம் வரும் 30-ம் திகதி மாலை 3 வணிக்கு சபை மண்டபத் தில் தலைவர் திரு சி. க. சபா பதி தலைமையில் நடை பெறும்.

மன்றம் வளராது என வதிரி வாணி கலைமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் உடு பிட்டித் தமிழ் மன்ற இணைச் செயலாளர் திரு. எஸ். ஆறு முகம் கூறினார். திரு. அரிய குணராசா தலைமைவகித் தார். திரு. கே. பாலசிங்க மும் பேசினார்.

# யாழ்ப்பாண ....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவமுடைய இவர் இக் கோஷ்டியின் ஆரம்ப துடுப் படி வீரர். வேகமாக ஓட்டங்களையும் எடுக்கக் கூடிய இவர் மைதானத்தில் எந்தப் பகுதியிலும் நின்று பந்தைத் தடுப்பதில் வல்ல வர்.

**ரி. ஆர். சூடாமணி:-** கிரிக் கெட் உலகில் மூன்றுவருட அனுபவம் உடைய இவர் யாழ். மாவட்டத்தில் சிறந்த 'விக்கெட் கீப்பராக' இரு ந்து வருகின்றார். இவர் இக் கோஷ்டியின் ஆரம்ப துடுப் படிவீரருங்கூட.

**பி. நமசிவாயம்:-** வேக மாகத் துடுப்பெடுத்தாடக் கூடிய இவர், கிரிக்கெட் உல கில் மூன்றுவருட அனுபவம் உடையவர். விக்கெட்டின் அண்மையில் நின்று பந்தை தடுப்பதில் வல்லவர்.

**வி. தங்கராஜ்,-** கிரிக்கெட் உலகில் 2 வருட அனுபவம் உடைய இவர் மெதுவாகப் பந்து வீசுவதிலும், வேக மாகத் துடுப்பெடுத்தாடுவ திலும் கெட்டிக்காரர். திற மையாகப் பந்து தடுக்கவும் கூடியவர்,

**எஸ். டி. குலநாதன்:-** இக் கோஷ்டியின் ஆரம்ப பந்து வீச்சு வீரரான இவர், இம் முறை கூடுதலான விக்கெட் டுகளை மிக வெற்றிகரமாக கைப்பற்றியுள்ளார். இவ ரின் அபார பந்து வீச்சினுல் இம்முறை இக்கோஷ்டி பல வெற்றிகளைக் கண்டுள்ளது. இம்முறை நடந்த போட்டி யொன்றில் வடமாகாணத் தில் மிக வேகமாக 100 ஓட் டங்களை எடுத்த சிறந்த துடுப்பாடிவீரருங்கூட.

**ஏ. றொபேட்ஸ்:-** கிரிக் கெட் உலகுக்குப் புதியவ ராக இவர் வடமாகாணத் திலே சிறந்த பந்து தடுப்பு வீரராக இருந்துவருகிறார். இடதுகை துடுப்படி வீர ரான இவர் வலதுகையால் பந்துவீசவும் கூடியவர்.

**வி. சுந்தரராசா:-** கிரிக் கெட் உலகுக்கு புதியவரான இவர் சகலதுறைகளிலும் திறமை வாய்ந்தவர்.

**ஜீ. யே. பொணி:-** துடுப் பெடுத்தாடுவதிலும், பந்து தடுப்பதிலும் சிறந்தவரான இவர் கிரிக்கெட் உலகுக்குப் புதியவர். (தே நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அஹிம்சையும் சத்தியமும் ஒன்றுக்கொன்று பலமாகப் பிணைவு கொண்டிருப்பவை. அவற்றை வேருக்குவதோ பிரிப்பதோ முடியாத காரியம்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 12-ந்திகதி (25-3-69)


## பாகிஸ்தானில் ......

பாகிஸ்தான் விடுதலை பெற்ற இருபத்திஇரண்டாவது ஆண்டு தேசிய தினம் நேற்று முன் தினம் கொண்டாடப்பட்ட சமயத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்றுள்ள படுகொலை, கொள்ளை.தீவைப்பு போன்ற அராஜக நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் எவருக்கும் நிச்சயம் மகிழ்ச்சியளிக்கமுடியாது ,பாகிஸ்தானை உருவாக்கிய சிற்பி முகம்மதலி ஜின்னா அதைவளர்த்த லியாகத் அலிகான் போன்ற தலைவர்கள் இன்று உயிர் வாழ்ந்தால் இரத்தக் கண்ணீர் விடுவார்கள்.

சென்ற சிலமாதங்களாகவே பாகிஸ்தானில் அதிபர் ஆயூபின் ஆட்சிக்கெதிராகவும் ஜனநாயக ஆட்சிமுறை வேண்டுமெனக் கோரியும் ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகளில் ஆரம்பித்து அவை வன்முறைச் செயல்களாக விரிவடைந்து உடைமைக்குச் சேதம் ஏற்படுத்தியதுடன் பல உயிர்களையும்பலிகொண்டது. நிலைமை மோசமாகி வருவதை அறிந்த அதிபர் ஆயூப் மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்க முன்வந்தார்; சிறைப்பிடித்த அட்சியல் தலைவர்களை விடுதலை செய்தார்: அவர்களுக்கெதிரான வழக்குகளை வாபஸ் பெற்றார்; ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டார்; எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களின் கோரிக்கைகளையும் மாணவர் கோரிக்கைகளையும் அவர் ஏற்றுக்கொண்டார்; இத்தனைக்கும் மேலாக அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென்றும் அறிவித்தார். அயூபின் இந்தச் செயல்கள் பாகிஸ்தானில் மீண்டும் அமைதி ஏற்பட வழிசெய்யுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இன்று கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து கிடைக்கும் பயங்கரச் செய்திகள் அங்கு அரசாங்கம் இருக்கிறதா அல்லது பழைய காட்டுமிராண்டிக் காலத்துக்குச் சென்றுகொண்டிருக்கிறதா என வேதனையுடன் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. வீதியில் செல்லும் மக்கள் கொலை செய்யப்படுகிறார்கள். மரங்களில்உயிருடன் வைத்து ஆணியறையப்படுகிறார்கள். மக்களை அடித்து, வெட்டி நெருப்பில் தூக்கிப்போடுகிறார்கள் என்று செய்தி கிடைத்தால் எந்த மனித உள்ளம் தான்துணுக்குறாது?

எல்லாவற்றுக்கும் விட்டுக் கொடுத்த அதிபர் அயூப் கான், இந்த அராஜகத்துக்கு விட்டுக்கொடுக்காமல் துணிச்சலுடன் நடவடிக்கை எடுத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். இதற்கு அவருக்கு இன்று சக்தியில்லையென்றால், அதாவது நாட்டில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டி அமைதியைப் பாதுகாத்து அப்பாவி மக்களைக் காப்பாற்றும் சக்தியை பத்து வருட ஆட்சியின் பின்னர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் இழந்து விட்டாரென்றால், பாகிஸ்தான் மக்களின் நலனையும் பாகிஸ்தானின் எதிர்கால நலனையும் கருத்தில் கொண்டு ஆட்சி பீடத்திலிருந்து விலகிச் செல்வதே சிறந்தது.

## வகுப்புத் துவேஷம்

'தும்பரா பள்ளத்தாக்கிலே "நாம் தமிழர்" இயக்கம்' என்ற தலைப்புடன் கொழும்பிலிருந்து வெளியாகும் "சன்" பத்திரிகை வெளியிட்டுள்ள ஒரு 'செய்தி' நாட்டிலே தமிழருக்கு மாறாக வகுப்புத் துவேஷத்தை கிளப்பிவிடக் ... விபரீத விளைவுகளையும் செய்யுமென்பதை அப் பத்திரிகையின் ஆசிரியர்கள் உணரவில்லையா? உணர்ந்து வேண்டுமென்றே இந்த அபாண்டங்களை வெளியிடுவதாயின் இது பத்திரிகா தர்மமாகுமா? நாட்டின் ஒற்றுமைக்கும் அமைதிக் ...

## ஆட்சிமன்றத்திலே--

# பனம் பொருள் ஆராய்ச்சிக்கு பேர்னுட் செய்ஸா ஆதரவு

## பழைய கணக்குகள் பற்றி டாக்டர்கள் மோதல்

நமது நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

'யாகாவாராயினும்நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'

என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லிச் சென்றது எவ்வளவுதூரம் உண்மை என்பதை நல்லூர் பிரதிநிதி இன்றாவது அனுபவபூர்வமாக உணர்ந்திருப்பார் என்றுதான் நம்புகிறேன்.

முந்தாநாள் ஆட்சி மன்றக் கூட்டத்தில் கைத்தொழில் அமைச்சின்கீழுள்ள கூட்டுத்தாபனங்கள் பலவற்றின் நிர்வாக அறிக்கைகள்தான் விவாதிக்கப்பட்டன.

எண்ணெய், கொழுப்பு கூட்டுத்தாபனத்தின் 1964—1965-ம் ஆண்டிற்கான அறிக்கைமீது டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில், அந்தக்கூட்டுத்தாபன நிர்வாகத்தில் உள்ளகுறை, நிறைகளைப்பற்றி மிக ஆழமாக ஆராய்ந்து, பெருஆர்வத்தோடு பேசிக்கொண்டிருந்தபோதுதான், நல்லூர் டாக்டர் நாகநாதன் சமயா சந்தர்ப்பம் தெரியாமல், "இது உங்கள் ஆட்சி) கணக்குதானே!' என்று 1964-ம் ஆண்டில் எதிர்க்கட்சியினர் ஆட்சியிலிருந்தமையால், அந்த ஆண்டுக் கணக்கில் காணப்படும்குறைபாடுகளுக்கு அவர்களே பொறுப்பு என்ற பொருள் பட சொன்னபோது, டாக்டர் என்.எம். பெரேராவின் சிந்தனையோட்டம் தடைபட்டுவிட்டது.

"நான் என்றும் என்னுடைய அல்லது உம்முடைய தனிப்பட்ட கணக்கைப்பற்றி பேசவில்லை. கூட்டுத்தாபனத்தில் கணக்கைப் பற்றித்தான் பேசுகிறேன்" என்று கூறிவிட்டு, 'இந்த மனுஷனுக்கு அதைவிட்டு (1964-ம் ஆண்டைவிட்டு) வரவே முடியாது. அவருடைய வளர்ச்சியெல்லாம் அதோடு (1964-ம் ஆண்டோடு) அப்படியே தடைபட்டுவிட்டது!" என்று ஒரு போடுபோடவே, டாக்டர் நாகநாதன் அமைதியானார்!

### நல்லெண்ணெய் இலுப்பெண்ணெய்

இதே கூட்டுத்தாபனத்தைப்பற்றி கிளிநொச்சி எம். பி. கா. பொ. இரத்தினம் பேசுகையில். தெங்குப் பொருட்களைப் பற்றிய ஆரரய்ச்சியில் இறங்கும் கொழுப்பு கூட்டுத்தாபனம், "நல்லெண்ணெய், இலுப்பை எண்ணெய் ஆகியவற்றின் தயாரிப்பிலும். எள் உற்பத்தியிலும் அதிக நாட்டம் செலுத்தவேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இவருக்குமுன் பேசிய கொழும்புதெற்கு பிரதிநிதி திரு. பேர்னுட் சொய்சா, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் 'பனைமரப் பொருட்கள்பற்றிய ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவவேண்டும்' என்று முன்புசொன்ன யோசனையை வெகுவாக ஆதரித்து', வலியுறுத்தியும் பேசியபின்னர் பதிலளித்த கைத்தொழிலமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன எண்ணெய், கொழுப்பு கூட்டுத்தாபனம் 1964-ம் ஆண்டிலிருந்துதான் லாபம் காட்ட ஆரம்பித்திருக்கிறதையெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுபடுத்தினார். அவர் பேசிய ஒவ்வொரு சொல்லும் துள்ளிக் குதித்த திரு ஷெல்டன் ஜயசிங்காவுக்கு ஒவ்வொரு சாட்டையடியாக விழுந்தது

திரு. பீலிக்சுக்குப்பின்பேச எழுந்த அமைச்சர் பிலிப் குணவர்த்தன பீலிக்சுக்குப் பதலடி கொடுக்கப் போகிறார் என்றுதான் எல்லாரும் எதிர்பார்த்து இருந்தார்கள் ஆனால் பிலிப்போ எல்லாரையும் ஏமாற்றி விட்டார். சமயா சம்பந்தம் இல்லாத விஷயங்களைப்பற்றியெல்லாம் நான் விவாதிக்கத் தயாராவில்லை என்று தட்டிக்கழித்து விட்டார்.

கூட்டுத்தாபன அறிக்கைகள் மீதான விவாதம் ஆரம்பிக்கப் படுவதற்கு முன் உள்ளூராட்சி அமைப்புடன் திருத்த(மசோதா) விவாதிக்கப்பட்டது. 'திரு. பிரேமதாசா உள்ளூராட்சி அமைப்புகளின் வருமானத்தை அதிகரிக்க பல புதியமுறைகளைதான் அமுல் நடத்தப் போவதாகத் தெரிவித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 25—3—69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன் 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 இளைஞர் மன்றம்.

**344 மீ. அன் 61 மீ.**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 நாடோடிப் பாடல், 6-30 கானமஞ்சரி, 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரைச்சித்திரம், 10-00 தேர்ந்த இசை.

## இன்றைய ...

## தந்தி மாறிஅனுப்பியதால் ஏற்பட்ட விபரீதம்

அளவெட்டி, திங்கள்

கமத்தொழில் இலாகாவினர் கிளிநொச்சிக்குக் கொடுக்கப்பட வேண்டிய தந்தியை காங்கேசன் துறைக்கு கொடுத்ததால் ஏற்பட்ட விபரீதம் ஒரு குடும்பத்தையே திணற வைத்துவிட்டது. கிளிநொச்சி கமத்தெழில் இலாகாவில் இருவர் ஒரே பெயருடன் கடமையாற்றியதே இதற்குக்காரணமாம்.

கிளிநொச்சியைச் சேர்ந்த அரியரத்தினம் என்பவரும் காங்கேசன் துறையைச் சேர்ந்த அரியரத்தினம் என்பவரும் இங்கு கடமையாற்றிவந்ததாகவும், கிளிநொச்சியைச் சேர்ந்த அரியரத்தினம் காலமானதை, தவறுதலாக காங்கேசன் துறை அரியரத்தினம் காலமாகிவிட்டார் என்று தந்தி கொடுக்கப்பட்டதாகவும் பின்னர் தெரியவந்தது.

காங்கேசன்துறை அரியரெத்தினம் என்பரின் பெற்றோர் தங்கள் மகன் இறந்துவிட்டார் என்று தந்தி கிடைத்ததும் கிளிநொச்சிக்கு விரைந்து சென்ற பொழுதே இந்த உண்மை தெரியவந்தது.

## உற்சவம்

கிளிநொச்சி, திங்கள்

கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் கோவில் வருடாந்த பொங்கல் விழா வருகிற 1-ந் திகதி நடைபெறும். அன்றைய தினம் காவடி, தீக்குளிப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## நாளை ஓய்வு

## போட்டியிடுமாறு வற்புறுத்து

யாழ்ப்பாணம், செவ்வாய்

சாவகச்சேரி எம். பி. திரு. வி என். நவரத்தினத்தை எதிர்வரும் பொதுத் தேர்தலில்போட்டியிடுமாறு வற்புறுத்த திரு.சிவ. வைத்திலிங்கம்தலைமையில் தூதுக்குழுவொன்று இம்மாதம் 30-ம் திகதி அவரை நேரில் சந்திக்கவிருக்கிறது.

இதுசம்பந்தமாக சாவகச்சேரியைச் சேர்ந்த 25 பிரமுகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஒரு நிருபத்தில் எதிர்வரும் ஆட்சி மன்றத் தேர்தலில் திரு. நவரத்தினம் போட்டியிடாது பின்நிற்க யோசித்துள்ளார் என்ற செய்தி கவலையளிப்பதாகவும் தமிழினத்தையே தலைகுனிய வைப்பதாக இருப்பதாகவும் இது தொகுதியைப் பொறுத்தவரை பெரும் வேதனைக்குரியதொன்று எனவும் இதனால் தொகுதி மக்கள் தவிக்க வேண்டியநிலை ஏற்பட நேரிடும் என்றும் தெரிவிக்கப் ...

## ஐயாறன் எழுதுவது

இதைஎழுதுகையில் வெயிலும் புழுக்கமும் தாங்கவில்லை. வானத்தில் மப்புப் போடுகிறது. முந்தாநாள் மழைபெய்யும் போலிருந்தது. ஆனால் மேகங்கள் கலைந்து சென்றுவிட்டன. ஒருசொட்டுமழையும்பெய்யவில்லை.

இரவிலே படுத்தால், கொசுக்கள் மொய்த்துக் கொண்டு உடலெல்லாம் 'இஞ்சக்ஷன்' போடுகின்றன. போர்த்துக்கொண்டாலோ ஒரே புழுக்கம். வியர்த்துக் கொட்டுகிறது. விடிந்ததும் காலையிலேயே 'சுள்' என்று வெயில் பொசுக்குகிறது. என்ன செய்யலாம்.

கொழும்பிலேயும் வெயில் கொளுத்துவதாகவும் புழுக்கம் அதிகமாக இருப்பதாகவும் ஓர் அன்பர் எழுதுகிறார். அதைக் கேட்டதும் ஒருவித ஆறுதலாக இருந்தது. நம்மைப்போல் அல்லது நம்மை விட சிலர் அதிக சங்கடப்படுவதைக் கேட்கும்போது நமது கஷ்டம் பெரிதாகத் தோன்றுது தானே!

0 0 0

உள்நாட்டு அமைச்சர் தகநாயக்கா, இந்தக் கோடையை கொழும்பிலே தமது காரியாயத்தில்எப்படி சமாளிக்கிறார் தெரியுமா? கொழும்புப் பத்திரிகையில் போட்டிருந்த படத்தைக் கண்டு திடுக்கிட்டேன். இடுப்பிலே சின்னத்துண்டு மட்டும்தான். மற்றப்படி பிறந்தமேனிக்கு, தமது காரியாலயத்துக்கு வந்தவரை எழுந்து நின்று, புன்முறுவலுடன் வரவேற்கின்றார். உலகிலேயே ஓர் அரசாங்க அமைச்சர், இவ்விதம் அரைநிர்வாணமாகத் தமது காரியாலயத்தில் கூச்சமின்றி காட்சியளிப்பதைக் கேட்டிருக்கிறீர்களா?

அவர் சில வருடங்களுக்கு முன், துணிப்பஞ்சத்தைப் பற்றி அரசாங்கத்துக்கு இடித்துக்காட்ட. பார்லிமெண்டுக்குப் பக்கத்திலே கோவணம் மட்டும் அணிந்து நடமாடியது ஓர் உலக ரிக்கார்டாகும், அவ்விதமான ஒரு துணிந்த 'கட்டை', இந்தவெயிலில், ஒருதுண்டு மட்டும் கட்டிக் கொண்டு காரியாலயத்தில் வேலைபார்த்து சூரியனை எதிர்த்து வெற்றியுடன் போராடுவது வியப்பில்லை. ஆனால் இந்த அமைச்சரை அரசாங்கக் காரியாலயத்திலுள்ள ஆண் பெண் ஊழியர்கள் அனைவரும் பின்பற்ற ஆரம்பித்தால் எப்படி இருக்கும்! ஆனால் 'தகா' வைப்போன்ற இவ்வித துணிச்சல் ஒரு சிலருக்கும் வராதாகையால், இதைப் பற்றி 'பயப்பட'த் தேவையில்லை.

0 0 0

இந்தக் கோடைகாலத்திலும் கூட, 'கண்ட கௌபீன' (டை) சகிதம் வெள்ளைக்காரரைப் போல் பூட்ஸ், ஸ்டாக்கிங்ஸ் எல்லாம் அணிந்து பலர் சங்கடப்படுவதைப் பார்க்கிறோம் பாவம்! ஒவ்வொரு நாட்டு சீதோஷ்ணத்துக்கும் தகுந்தபடி உடை அமைந்துள்ளது. குளிர்ப் பிரதேசத்துக்கான உடையை, உஷ்ண பிரதேசத்திலும் வீண் கௌரவத்துக்காக சிலர் அணிகிறார்கள். பாவம் பரிதாபம்.

0 0 0

வெயில்காலத்தில் அடிக்கடி தாகமெடுக்கிறது. இப்போதும் சூடான சாப்பிதேத்தண்ணீர் அல்லது 'பார்லி' சாப்பிடுவதுதான் 'பாஷ'னாக உள்ளது!

சில நாட்களுக்கு முன் கலைஞர் பகவதி 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வந்தபோது, இளநீரை வெட்டி, அதற்குள் ஐஸ்போட்டு ஒரு 'ஸ்டிரா' வும் வைத்துக் கொடுத்ததில், அவர் இரண்டு இளநீரைக் குடித்து திருப்தி தெரிவித்தார்.

இங்கு நல்லவேளையாக தென்னைமரங்களுக்குக்குறைவில்லை. கோடையிலே இங்கு இளநீரை விட மேலான பானம் வேறென்ன இருக்க முடியும், அது நல்ல சுகாதாரமான உணவும்கூட. இங்கு யாழ்ப்பாணத்தில் ஏன் கடைகளில் அதை விற்பதில்லை?

0 0 0

இருந்துசொல்லுவன்
கேண்மின்கள் ஏழைகாள்
அருந்தவந்தரும் அஞ்
செழுத்தோதினால்
பொருந்து நோய்பிணி
போகத்துரப்பதோர்
மருந்துமாகுவர்
மன்னுமாற்பேரரே.

—அப்பர் அடிகள்.

## தமிழ் திரைபடக் குறைபபுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கிலே ''நாம் தமிழர்'' இயக்கம்' என்ற தலைப்புடன் கொழும்பிலிருந்து வெளியாகும் ''சன்'' பத்திரிகை வெளியிட்டுள்ள ஒரு 'செய்தி' நாட்டிலே தமிழருக்கு மாருக வகுப்புத் துவேஷத்தை கிளப்பிவிடக் கூடியதாக இருக்கிறது.

அப்பகுதியில் 'நாம் தமிழர்' இயக்கம் கிராமங்களிலும் ஊடுருவுவதாகவும், அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை அளிக்க, கைத்தொழில்களை ஆரம்பிப்பதுடன், அதிக நிலங்களை வாங்குவதாயும், இதற்காக ஏராளமான பணத்தை இந்த இயக்கம் கொடுப்பதாயும், தெல்தெனியாவில் ஓர் உரத் தொழிற்சாலை இதற்காக ஆரம்பித்துள்ளதாயும், குண்டசாலைத் தொகுதிக்கு வருகிற தேர்தலில் போட்டியிடுவது சாத்யமா என்று இந்த இயக்கத்தார் ஆலோசித்து வருவதாகத் தெரிவதாகவும் அப்பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

தமிழகத்திலேயே 'நாம் தமிழர்' இயக்கம் கலைக்கப்பட்டுவிட்டபோது, இலங்கையில் அந்த இயக்கம் பரவி வருவதாக இவ்விதம் அடிக்கடி செய்திகளை வெளியிட்டு, தமிழர் மீது துவேஷத்தையும் சந்தேகத்தையும் கிளப்பிவிடுவது ஒரு பொறுப்பான பத்திரிகைக்கு அழகல்ல. அந்த இயக்கத்துக்குப் பெரும் பணம், அங்குள்ள இந்து ஆலய உண்டியல் பெட்டிகளில் வசூலாவதாகச் சொல்லப்படுகிறதென்று கயிறு திரித்திருப்பது எவ்வளவு தப்பெண்ணங்களையும் செய்யுமென்பதை அப்பத்திரிகையின் ஆசிரியர்கள் உணரவில்லையா? உணர்ந்து வேண்டுமென்றே இந்த அபாண்டங்களை வெளியிடுவதாயின் இது பத்திரிகா தர்மமாகுமா? நாட்டின் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் நன்மையாகுமா?

மலைநாட்டிலே தமிழருக்கு மாருக துவேஷம் அதிகரித்து வருவதற்கு இவ்வித பத்திரிகைச் செய்திகளே பெரிதும் காரணமாகும். இதை இப்படியேவளரவிட்டால் மீண்டும் இங்கு வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு என்னென்ன விளைவுகள் ஏற்படுமோ! இவ்வித செய்திகளைப் பிரசுரிப்பது சட்டப்படி குற்றமா இல்லையா என்பதைப் பற்றி கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் வகுப்புக்கலகங்கள் மீண்டும் இந்நாட்டில் கிளம்பக்கூடாதென்பது பற்றி பொறுப்புள்ள தேசாபிமானிகளிடையே வேற்றுமை இருக்கமுடியாது. இதே விஷயமாக இந்தியாவிலே பத்திரிகை சபை பத்து கோட்பாடுகளடங்கிய நகல்திட்டத்தைத் தயாரித்து அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ளது. இலங்கையில் துரதிருஷ்டவசமாக ஒரு பத்திரிகைச் சபை இன்னும் ஏற்படவில்லை. ஆகவே நாட்டிலுள்ள பத்திரிகாசிரியர்களையெல்லாம் பிரதமர் மாதம் ஒருமுறையாவது அழைத்து நாட்டில் வகுப்பு சமரசத்தையும் அமைதியையும் பாதுகாக்க உதவ வேண்டியதைப் பற்றி கலந்து பேசுவதுபெரிதும் பயன்அளிக்கக்கூடும்.

## பிரிவுபசாரம்

உடுப்பிட்டி திங்கள்

நெல்லியடிப்பட்டின சபையில் பிரதம லிகிதராகக் கடமையாற்றி யாழ் மாநகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு. எஸ். செவந்திநாதனுக்குப் பட்டினசபை ஊழியர்களால் பிரியாவிடை அளிக்கப்பட்டது. விசேஷ ஆணையாளர் திரு. அ. அயோசேப் தலைமையில் நடைபெற்ற இப்பிரிவுபசாரத்தில் சிரேஷ்ட உள்ளூராட்சி ஆணையாளர் திரு எஸ். எஸ், மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

## மதில் உயருகிறது

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் முன்பக்கச் சுற்றுமதில் இன்னும் 2 அடி உயர்த்திக் கட்டப்படவிருக்கின்றது. இரவில் மதில் ஏறிப் பாய்பவர்கள் தொல்லையையும், அதிகரித்து வரும் காடைத்தனங்களையும தடுக்கவே ஆஸ்பத்திரி அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுகின்றனர்.

(கா. நி)

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மார்ச் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரைச்சித்திரம், 10-00 தேர்ந்த இசை.

## இன்றைய பலன்

(25-3-69)

பங்குனிமாதம், 12 உ

செவ்வாய்க்கிழமை

திதி- சப்தமி மாலை 5-27 மேல் அட்டமி.

நட்சத்திரம்- மிருகசீரிடம் இரவு 8-01மேல் திருவாதிரை.

ராகுகாலம்- 3-15 - 4-45.

சுபநேரம்- 10-45 — 12-15.

இன்று பிறந்தவர்களுக்கு—விவசாயிகளுக்கு வெற்றிக்குரிய ஆண்டாகும். பிணி நீங்கும். பெரியோர் ஆதரவு பெரும் நன்மையைத் தரும். குடும்பத்தில் குதூகலம்தரும். குழந்தைகள் உற்சாகமாக விளங்குவர். உயர் கல்வி பயில்வோருக்கு வெற்றியைக் கொடுக்கும் நல்லாண்டாகும்.

மேஷம்- பாக்கிய விருத்தி பணமும் சேரும்.
ரிஷிபம்- கண்துடைப்பு வேலை, கவனம்வேண்டும்.
மிதுனம்- கால்நடை கஷ்டம் காரிய தாமதம்.
கடகம்- தேனைவாழ்வு தேடியது கிடைக்கும்.
சிம்மம்- தற்பெருமை தடுமாற்றம் உண்டு.
கன்னி- வாகனநலன், வளம்பெறும்நிலை.
துலாம்- மதிவழி நில் மறுமலர்ச்சி உண்டு.
விருச்சிகம்- அவசர முடிவு அநுகூலத்தடை.
தனுசு- நம்பிக்கை வளரும் நலமும் சேரும்.
மகரம்- இசைத்துறை ஆர்வம், குரு விசுவாசம்,
கும்பம்- தொழில் சீர்பெறும் ஆனந்தநிலை.
மீனம்- செய் தொழில் சிறப்பு, ஜெயம் உண்டு வாழ்வில்.

—சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

யோசனையை வெகுவாக ஆதரித்தும், வலியுறுத்தியும் பேசியபின்னர் பதிலளித்த கைத்தொழிலமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன எண்ணெய், கொழுப்பு கூட்டுத்தாபனம் 1964-ம் ஆண்டிலிருந்துதான் லாபம் காட்ட ஆரம்பித்திருக்கிறதென்று கூறி 1964-ம் ஆண்டிலிருந்து ஏற்பட்டுள்ள படிப்படியான முன்னேற்றத்திற்கோமூலகாரணமான கூட்டுத்தாபன அதிகாரிகளை வெகுவாகப் பாராட்டினர்.

அடுத்து இலங்கை தளபாடக் கூட்டுத்தாபனத்தின் அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றபோது இறக்குமதி செய்யப்பட்ட முதலைமார்க் மண்வெட்டியா அல்லது கூட்டுத்தபானத்தின் தயாரிப்பான 'கொவியா' மார்க்மண்வெட்டியா தரத்தில் உயர்ந்தது என்துபற்றி அமைச்சருக்கும், பொடிபுத்தா முதியான்சே தென்னக்கோனுக்கும் இடையில் கருத்துவேறுபாடு ஏற்பட்டது.

ஹபராதுவ எம்.பி. திரு. பிரின்ஸ் குணசேகரா, முதலைமார்க் மண்வெட்டிகள் பற்றிய விவாதத்தை பண முதலைகள் நமது கைத்தொழில்களையும் கூட்டுதாபனங்களையும் நசுக்கமுயலும் கத்தோலிக்க முதலைகளை என்று பேசி திசைதிருப்பிவிட்டார்.

திரு. பிரின்ஸ் குணசேகரா கத்தோலிக்க திருச்சபை கைப்பற்றி கௌரவக்குறைவாகப்பேசி விட்டதாக வத்தளை எம்.பி. திரு ஷெல்டன் ஜயசில்வா துள்ளி எழுந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி. ஒருவர் பேசும் போது இக்கட்சியின் தலைவியும்கேட்டுக் கொண்டு தடுக்காமல் இருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கத்தோலிக்க திருச் சபையைப்பற்றி இப்படிக் கௌரவக் குறைவான கருத்தைத்தான் கொண்டிருக்கிறது என்று சொன்னர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப்பற்றிப் சொன்ன பிறகுதிரு. பீலிக்ஸ் டயஸ் சும்மா இருப்பாரா? விஷமப் புன்னகையுடன் எழுந்த அவர் திரு.பிரின்ஸ் குணசேகரா கைதொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனவின் மாஜி கிஷயர்களில் ஒருவர்தான் என்பதையும் நினைவு படுத்தி 'குருவின் கீழ் பாடம் கேட்டதன் பலன் தானே என்னவோ! என்றுசொல்லி திரு பிலிப் குணவர்தன எதிர்க்கட்சியிலிருந்தபோது எத்தனையோ சந்தர்ப்பங்களில் பிரின்ஸ் குணசேகராவைப் போல கத்தோலிக்க நடவடிக்கை இயக்கத்தைப் பற்றி வெகு தீவிரமாகப் பேசிய

கோவில் வருடாந்த பொங்கல் விழா வருகிற 1-ந் திகதி நடைபெறும். அன்றைய தினம் காவடி, தீக்குளிப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## நாளை ஓய்வு பெறும் ஆசிரியர்

நல்லூர் தொகுதியைச் சேர்ந்த பெரியபுலம் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கடந்த 28 ஆண்டுகளாக தலைமை ஆசிரியராகப் பணி புரிந்த திரு. கந்தையா சாமுவேல் திரவியம் தமது 60-வது வயதில் நாளையுடன் ஓய்வு பெறுகிறர், 1935-ம் ஆண்டு வைகாசி மாதம் 1-ம் திகதி மாதனை மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்ட இவர் 34 வருடங்கள்வரை ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

தம்பசெட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தலைமையாசிரியராக இருந்த யோசெவ் நாகநாதர் கந்தையாவின் புத்திரரான இவர் 1937-ம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியராக நியமனம் பெற்றர். இவரது துணைவியும் ஒரு ஆசிரியை

1939-ம் ஆண்டு அச்செழு மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்குத் தலைமையாசிரியராக நியமனம் பெற்ற இவர், 1941-ம் ஆண்டில் பெரியபுலம் பாடலைச்கு இடமாற்றம் பெற்று, தலைமையாசிரியராகத் தொடர்ந்து கடமையாற்றினர். 5 ஆசிரியர்கள் மட்டும் கடமையாற்றிய போது நியமிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் தற்போது 22 ஆசிரியர்கள் பணிபுரிகிறர்கள். 1950-ம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலையாகத் தரம் உயர்த்தப் பட்டதும் இவரது அயரா உழைப்பினுல்தான் என்ருல் மிகையாகா.

ஓர் அன்பர்

## அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் பணிபுரிந்த செல்லையா மகேஸ்வரன் இம்மாதம் 17-ம் திகதியிலிருந்து விலகி விட்டார். இத் திகதியிலிருந்து அவருடன் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல

ஏ. எஸ். அரசரட்ணம் அன் கொம்பனி,
11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
1244

தாகவும் தமிழினத்தையே தலைகுனிய வைப்பதாக இருப்பதாகவும் இது தொகுதியைப் பொறுத்தவரை பெரும் வேதனைக்குரிய தொன்று எனவும் இதனல் தொகுதி மக்கள் தவிக்க வேண்டியநிலை ஏற்பட நேரிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது முடிவை மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமுத்திரா இருவரை பலி எடுத்தது

கொழும்பு திங்கள்

'சமுத்திராதேவி' இருவரை பலி எடுத்தது. வாதுவை ரயில் நிலையத்துக்கு அருகில் ஒருவரையும்கழுத்துறை அழுக்கம பாறைக்கு இடையில் ஒருவரையும் பலி எடுத்தது.

## மகஜர்

சுழிபுரம், திங்கள்

பொன்னலைக் கிராமத்தில் பகுதி நேர மருந்து கொடுக்கும் நிலையம் ஒன்றை ஆரம்பிக்குமாறு பொன்னலை நெல்லியான் கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் யாழ்ப்பாண சுகாதார சேவை அத்தியட்சகருக்கு அனுப்பிய மகஜரில் கோரியுள்ளனர்.

## இந்துமாமன்ற கூட்டம்

கோட்டை, செவ்.

அகில இலங்கை இந்து மாமன்ற அதிகார குழுக் கூட்டம் இன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற விருக்கிறது. திருக்கோணேசர் ஆலயப்பிரதேசம் புனித நகராக்குதல் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

## கேணியை ..

[1ம் பக்கத்தொடர்ச்சி]

ருந்தது. கிளிநொச்சி உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு எஸ். டி. சில்வா தலைமையில் 60 பொலிசார் ஆயுதம் தாங்கிநின்று கொண்டிருந்தனர்.

சுமார் ஆயிரம் அடியார்கள் பொங்கினர்.

ஆலயம்இப்போதும்வெளி அடியார்களுக்குப் பூட்டப்பட்டேயிருக்கிறது.

## பாம்பு படமெடுத்தது

நேற்று அதிகாலை கோவிலில் இரு நாகபாம்புகள் கோவிலின் வாசலில் வந்து சுமார் 10நிமிடங்கள்வரை படமெடுத்து விட்டு உள் சென்றதாக கோவில் பணியாளர் திரு. க. முத்துக்குமாரசாமி தெரிவித்தார்.

விதமான ஒரு துணிந்த 'கட்டை', இந்தவெயிலில், ஒருதுண்டு மட்டும் கட்டிக் கொண்டு காரியாலயத்தில் வேலைபார்த்து சூரியனை

பொருந்து நோய்பிணி
போகத்துரப்பதோர்
மருந்துமாகுவர்
மன்னுமாற்பேரரே.
—அப்பர் அடிகள்.

## தமிழ் திரைபபடக் குறைபபுக்கு தமிழ்அரசுக்கட்சி ஆட்சேபம்

### பிரதமரைச் சந்திக்க முடிவு

கோட்டை திங்கள்

தமிழ்ப் திரைப்படப் பிரதிகளைக் குறைத்ததற்கு பலத்த ஆட்சேபம் தெரிவித்து தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளனர் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதன் தலைமையில் நேற்றுமாலை கொழும்பில் கூடி இதுபற்றிஆராய்ந்தனர் அரசாங்கம் தமி திரைப்பட இறக்குமதியை 20வீதம் பிரதியை 3டாகக் குறைத்ததற்கு தமிழரசுக்கட்சி எம். பிக்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகாவைச் சந்தித்து இதுபற்றி எடுத்துக்கூறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# கொப்பரு ஏற்றுமதி நிறுத்தப்படலாம்

கொழும்பு, செவ்.

இலங்கையிலிருந்து தெங்குப் பொருட்கள்-கொப்பரு தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்வதையொட்டி புதிய திட்டமொன்றை வகுப்பதில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின்படி ஆரம்பத்தில் கொப்பரு ஏற்றுமதியை முற்றாக ரத்துச் செய்துவிட்டு ஏற்றுமதிக்கான கொப்பருவை பயன்படுத்தி இலங்கைஆலைகளின் மூலமாகவே எண்ணெய் பெற அரசாங்கம் முயற்சிக்கும்.

இலங்கையிலுள்ள தேங்காய்எண்ணெய் ஆலைகளில் பாதிக்கு மேல் முழு அளவு இயக்கப்படாது இருப்பதால் அந்த எண்ணெய்ஆலைகளைப் பூரணமாக பயன்படுத்தவே அரசாங்கம் இந்தஏற்பாட்டை மேற்கொள்ளவிருப்பதாக கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன கூறியுள்ளார்.

எண்ணெய் கொழுப்பு கூட்டுத்தாபனம் தெங்குப் பொருட்களிலிருந்து பெறக்கூடிய உப பொருட்களைப் பற்றிய ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதால் பிற நாடுகள் நமது நாட்டிலிருந்து கொப்பருவையும் தேங்காயெண்ணையையும் இறக்குமதி செய்து அவற்றைச் சுத்திகரித்து பெறும் பொருட்களை எண்ணெய் கொழுப்பு கூட்டுத்தாபனத்தின் நவீன இயந்திரங்களை பயன்படுத்தி நாமேபெற்று ஏற்றுமதி செய்யலாம்என்று கைத்தொழில் அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தன அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

தெங்குப் பொருட்கள் அவற்றிலிருந்து பெறக்கூடிய உப பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி ஏற்றுமதி ஆகியவைபற்றி விரிவான திட்டமொன்றை தயாரிக்க தெங்குப்பொருட்சபை. தெங்குப்பொருட்கள் ஆராய்ச்சி நிலையம், எண்ணெய், கொழுப்புக்கூட்டுத்தாபனம் ஆகிய மூன்று அமைப்புகளையும் சேர்ந்த நிபுணர் குழுவொன்றும் விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

## பொலிசாருக்கு ஏற்பட்ட தடுமாற்றம்

யாழ்ப்பாணம், செவ்.

மரணமான சிறுமியின் உண்மையான தந்தையார் என்பதைக் கண்டுபிடிப்பதில் பொலிசாருக்குப் பெரும் 'தலையிடி'யைக் கொடுத்தாராம் திடீரென அங்கு வந்து சேர்ந்த நபர் ஒருவர். இச்சம்பவம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

கிணற்றடியில் வீழ்ந்து மண்டை உடைந்து மரணமான சிறுமி ஒருவரின் சடலத்தைத் தவறுதலாகத் தனது பிள்ளை என நினைத்து அங்கு வந்த ஒருவராலேயே இந்தப்பிரச்னை ஏற்பட்டது.

இறுதியில் சடலத்தைப் பார்த்த பின்னரே இறந்தது தனது மகள் அல்லவென அறிந்துகொண்ட 'திடீர்த் தந்தை' அங்கிருந்து சென்ருராம். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினத்தால் மரணவிசாரணை நடாத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org